பக்கங்கள்-16 | 14,பங்குனி.2021 | விலை-30.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -337




## தாயின் பசி!! தாயகம் - தமிழகம் - புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகங்களை ஒன்றிணைக்க செய்ய வேண்டியது என்ன?



## கோட்டாபயவின் அபிவிருத்தி அரசியலும் சிறுபான்மை இனங்களின் அவலநிலையும்



## சீனா, இந்தியா, அமெரிக்கா – இலங்கை விவகாரத்தில் எதைச் சாதிக்க நினைக்கின்றது

# தாயின் பசி!! தாயகம் - தமிழகம் - புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகங்களை ஒன்றிணைக்க செய்ய வேண்டியது என்ன?

"ஐநா எனப்படுவது எங்கள் எல்லோரையும் இணைக்கும் ஒரு அற்புதமான கருத்து. அது மேலும் பலம் அடைவதை மேலும் சிறப்பானதாக உறுதியான நிலைப்பாடுடைய ஒன்றாக வருவதை விரும்புகிறேன். ஆனால் இப்பொழுதும் ஐ.நா.மனித உரிமைகளோடு தொடர்பே இல்லாத அரசியல் நலன்களின் செல்வாக்குக்கு உள்ளாகிறது. அது ஐ.நாவை அமைப்பு ரீதியாக ஊழல் மிகுந்தது ஆக்கிவிட்டது. நான் நம்புகிறேன் நாங்கள் ஐ.நாவைமக்களுக்குசேவைசெய்யும்ஒன்றாக மாற்றவேண்டும். அரசியல்வாதிகளுக்குசேவை செய்யும் ஒன்றாக அல்ல. எனது படம் ஆகிய Quo Vadis Aida ஐ.நாவின் முடிவுகளின் சுயாதீனம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான உறுதியான நிலைப்பாடு குறித்த கேள்விகளை எழுப்ப உதவும் என்று நான் உண்மையாகவே நம்புகிறேன் ...." இவ்வாறு தெரிவித்திருக்கிறார் Quo Vadis Aida என்றதிரைப்படத்தின் நெறியாளர் ஆகிய ஜஸ்மிலா ஸ்பானிக். அவர் ஸ்ரெபெர்னிகா இனப்படுகொலையில் தனது 17வது வயதில் தப்பிப்பிழைத்த ஒரு பொஸ்னியப் பெண். ஐ.நாவில் பல ஆண்டுகள் வேலை செய்தவர். அண்மையில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி டைம்ஸ் சஞ்சிகை அவரை நேர்கண்ட பொழுது அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். அவருடைய சர்ச்சைகளோடு பாராட்டப்பட்ட திரைப்படம் ஆகிய Quo Vadis Aida இப்பொழுது ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

1995இல் ஸ்ரெபெர்னிகா இனப்படுகொலையில் எண்ணாயிரத்துக்கும் குறையாதவர்கள் கொல்லப்பட்டார்கள் பெண்கள் சிதைக்கப்பட்டார்கள். அதில் தப்பிப் பிழைத்த ஜஸ்மிலா கூறுகிறார்... ஸ்ரெபெர்னிகாவில் இப்பொழுதும் அன்னையர் தங்கள் பிள்ளைகளின் அல்லது கணவன்மார்களின் அல்லது உறவினர்களின் எலும்புத் துண்டுகளை தேடிக்கொண்டிருப்பதாக. ஏதாவது ஒரு எலும்பு மிச்சம் கிடைத்தால் அதைப் புதைத்து ஒரு கல்லறையை கட்டிவிடலாம் என்று காத்திருப்பதாக. அந்தப் பெண்களின் உறுதியை கௌரவித்து அவர்களுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

அன்னையரின் துக்கம் அல்லது அன்னையரின் ஆவேசம் அல்லது அன்னையரின் காத்திருப்பு உலகம் முழுவதிலும் போராட்டங்களை பின்னிருந்து இயக்கியிருகிறது. தேற்றப்படவியலாத தாய்மாரின் துக்கம் ரஷ்யாவின் ஸ்தெப்பி வெளியில் தொடங்கி வல்லை வெளி, வாகரை வெளி, கைதடி வெளி வரையிலும் நிரம்பியிருக்கிறது. தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தில் அடைக்கலம் தந்த வீடுகள் என்று அழைக்கப்படும் அனேகமான வீடுகளில் தாய்மாரின் தியாகத்தை அர்ப்பணிப்பை துணிச்சலை காணலாம். போருக்குப் போன தமது பிள்ளைகளுக்காகவும் அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காகவும் உபவாசம் இருக்கும் ஆயிரக்கணக்கான அன்னையர்களின் கதை வெளியே தெரியவருவதில்லை.

எனக்குத் தெரிந்து பல அன்னையர் இரு வேளை உணவைத் துறந்து அல்லது ஒருவேளை உணவைத் துறந்து அல்லது சோற்றைத் துறந்து பாண் மட்டும் சாப்பிட்டு கொண்டு பிள்ளைகளுக்காக காத்திருப்பதை கண்டிருக்கிறேன். ஏற்கனவே பிள்ளை வரம் கேட்டு மண்சோறு சாப்பிடும் ஒரு பாரம்பரியத்தை கொண்ட மக்கள் நாங்கள். எனவே தவமிருந்து பெற்ற பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக தவமிருக்கும் அன்னையரின் தியாகத்தை கழித்துவிட்டு ஒரு விடுதலைப் போராட்டத்தின் ஒட்டுமொத்த தியாகத்தை குறித்து கதைக்க முடியாது. அண்மையில் கூட புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த ஓர் அன்னை காலமானார். அவருடைய வீடு ஆயுதப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் பலருக்கு புகலிடமாக இருந்த ஒரு வீடு என்பதை முகநூல் பதிவுகளை பார்த்தால் தெரியும். இப்பொழுதும் அவ்வாறு அடைக்கலம் கொடுத்த பல வீடுகள் அமைதியாக நிகழ்கால அரசியல் போக்கில் தலையிடாது அமைதியாக சாட்சிகளாக பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அதேசமயம் காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி மற்றொரு தொகுதி அன்னையர்கள் வீதியோர குடில்களில் அல்லது தீச்சட்டி தலையில் சுமந்தபடி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அன்னையரின் தியாகம் பசி தூக்கம் காயம் கண்ணீர் என்பவற்றால் வனையப்பட்டதே எந்த ஒரு போராட்டமும்.

அப்படி ஓர் அன்னைதான் இப்பொழுது பிரித்தானியாவில் உண்ணாவிரதம் இருக்கிறார். இக்கட்டுரை முதலாவதாக அவருடைய பசியை மதிக்கிறது. அவருடைய ஓர்மத்தைக் கௌரவிக்கிறது. அவருடைய போராட்டத்துக்கு பக்கபலமாக யாழ்பாணத்திலும் கிழக்கிலும் சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பல்கலைக்கழக மாணவர்களின் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தில் பெரும்பாலான நேரத்தில் மிகச்சிலரையே போராட்ட மேடையில் காணமுடிகிறது. சில சமயங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அங்கே வந்து இருப்பார்கள். கட்சிகளின் உறுப்பினர்கள் அங்கே வந்து இருப்பார்கள். அண்மையில் தென்னிலங்கையிலிருந்து மதகுருக்கள் வந்து இருந்தார்கள். ஆனாலும் பெரும்பாலான நேரங்களில் அந்த மேடை மிகச்சிலரோடு வெறிச்சோடிக் காணப்படும். இரவுகளில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த சிலர் வந்து தங்குகிறார்கள். மற்றும்படி கட்சிகள் இது விடயத்தில் தங்கள் பங்களிப்பை போதிய அளவு செய்யவில்லை என்று உணரப்படுகிறது. சில கட்சித் தலைவர்களிடம் கேட்டேன். அவர்கள் கூறுகிறார்கள் இந்த போராட்டத்தை தொடங்கும்போது மாணவர்கள் தம்மோடு கலந்துபேசவில்லை என்றும் அதற்குரிய கட்டமைப்பு எதையும் உருவாக்கவில்லை என்றும். மாணவர் அமைப்புக்குள்ளும் ஒன்றிணைந்த செயற்பாடு இல்லை. மாணவர்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் கட்சிகள் பங்களிப்புச் செய்யலாம் தானே?

இப்போராட்டத்தில் முன்நின்று செயல்படும் ஒரு மாணவர் தன்னுடைய இரண்டு நாள் பரீட்சைகளை எழுதவில்லை என்று தெரிகிறது. அந்த நாட்களில் அவருக்கு பதிலாக போராட்டத்தை பொறுப்பேற்க வேறு மாணவர்கள் இல்லை? இதுதான் நிலைமை. மிகச் சிலரின் தியாகத்தை பெருந்திரள் மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்களா? அல்லது மக்களைப் பங்காளிகளாக மாற்றத் தேவையான அரசியல் தரிசனம் சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் இல்லையா? தாயகத்தில் மக்கள் போராட்டங்கள் எந்த அளவுக்கு மக்கள் மயப்பட்டிருக்கின்றன என்பதற்கு இப்பொழுது முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டு. அதிலும் குறிப்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டத்தின் பின்னரான எடுத்துக்காட்டு.

இவ்வாறான ஒரு போராட்டச்சூழலை முன்வைத்து இக்கட்டுரை பின்வரும் கேள்விகளை எழுப்புகிறது.

முதலாவது கேள்வி. உலக சமூகத்திடம் நீதி கேட்டுப் போராடுவது என்பது ஐ.நா நோக்கிப் போராடுவதா? அது தனிய ஜெனீவா மைய அரசியல் மட்டுமா? இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட திரைக் கலைஞரின் கூற்றை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஐ.நாவை நம்புவதில் இருக்கும் ஆபத்தை அவர் உணர்த்துகிறார். அவர் ஐ.நாவில் பல ஆண்டுகள் வேலை செய்தவர் என்பதையும் இங்கு சேர்த்துக் கவனிக்கவேண்டும்.




இரண்டாவது கேள்வி. கடந்த பத்தாண்டுகளில் ஈழத்தமிழர்கள் மத்தியில் நிகழ்ந்த சாகும்வரையிலான உண்ணாவிரதங்கள் ஏன் வெற்றி பெறவில்லை? அரசியல் கைதிகளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோரும் சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை. கடந்த பத்தாண்டுகளில் யாரும் இறுதிவரை போராடவில்லை. அதற்காக இக்கட்டுரை உண்ணாவிரதிகள் சாகவேண்டும் என்று கேட்கவில்லை. சாகும் வரை உண்ணாவிரதம் என்பது ஒரு கடைசிப் போராட்டம்.

மூன்றாவது கேள்வி. இவ்வாறான போராட்டங்களை யார் முன்னெடுப்பது ஒப்பீட்டளவில் சிறந்தது? அதை பிரபல்யமாக இருக்கும் அரசியல்வாதிகள் முன்னெடுப்பதே சிறப்பு என்று மு.திருநாவுகரசு அண்மையில் கூறியிருக்கிறார். மக்கள் பிரதிநிகளுக்கு ஊடகக்கவர்ச்சி உண்டு. அனைத்துலக் அளவில் அங்கீகாரம் உண்டு. அவர்களை மக்கள் தமக்காகப் போராடத்தானே தெரிந்தெடுத்தார்கள்? எனவே அவர்கள் தியாகம் செய்யட்டும். அதன்மூலம் முன்னுதாரணமாகட்டும். அவர்களுக்குள்ள ஊடகக்கவர்ச்சி மற்றும் அங்கீகாரம் என்பவற்றை முதலீடாக்கி அவர்கள் சாகும் வரையிலும் உண்ணாவிரதம் இருக்கும் பொழுது அது உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும். அவர்களுக்கு வாக்களித்த மக்களையும் ஏதோ ஒரு உணர்ச்சி புள்ளியில் இணைக்கும். எனவே மக்கள் பிரதிநிதிகள்தான் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் கடந்த பத்தாண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஒரு கட்சித்தலைவரும் அவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கவில்லை. அது மட்டுமல்ல சட்ட மறுப்பாக போராடிய காரணத்தால் யாருமே இதுவரை சிறைக்கும் போகவில்லை. தலைவர்களும் சிறைகளை நிரப்பவில்லை. தொண்டர்களும் சிறைகளை நிரப்பவில்லை. இப்படிப்பட்ட மிக வறுமையான ஒரு போராட்டச் சூழலில்தான் யார்யாரோ தன்னார்வமாக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். யார் யாரோ போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். தலைவர்கள் அவர்களின் பின் இழுபடுகிறார்கள்.

நாலாவது கேள்வி. இது போன்ற போராட்டங்களை உலகம் எப்படிப்பார்க்கிறது? சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்ட திபெத் பிரதேசத்தில் இதுவரையிலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் திபெத்தின் விடுதலைக்காக தீக்குளித்து இறந்திருக்கிறார்கள். ஆனால் அந்த தியாகங்களெவையும் உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பவில்லை. ஏன் அதிகம் போவான்? உலகப் பேரூடகங்கள் அத்தீக்குளிப்புக்களைக் கண்டுகொள்வதேயில்லை. ஏன்? ஏனெனில் ஒரு போராட்டத்தில் எவ்வளவு தியாகம் செய்யப்படுகிறது என்பதல்ல இங்கு முக்கியம் எவ்வளவு புத்திசாலித்தனமாக பிராந்திய மற்றும் பூகோள அரசியல் நிலைமைகள் கையாளப்படுகின்றன என்பதே முக்கியமானது என்பதாலா?

இக்கேள்விகளை முன்வைத்து தமிழ்ச் சமூகம் ஆழமாக உரையாட வேண்டும். தமிழ் மக்கள் ஏற்கனவே நிறைய இழக்க கொடுத்துவிட்டார்கள். கிட்டத்தட்ட நால்வருக்கு ஒருவர் புலம்பெயர்ந்து விட்டார். எனவே தமிழ் சக்தி தொடர்ந்தும் சிதறக்கூடாது. அது சேமிக்கப்பட வேண்டும். திரட்டப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்து நீதிக்கான தமது போராட்டத்துக்கென்று தமிழ் மக்கள் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவல்ல ஒரு மக்கள் அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். அது தாயகம், தமிழ் புலம்பெயர்ந்த சமூகம் மற்றும் தமிழகத்தில் இருக்கும் தரப்புக்களையும் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கும் பொழுது ஒரு முக்கியமான முன் நிபந்தனையை நிறைவேற்ற வேண்டும்.

அது என்னவெனில், புலம்பெயர்ந்த தமிழ் பரப்பில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் அங்கே முன்வைக்கும் கோஷங்கள் முன்நிறுத்தும் சின்னங்கள் கொடிகள் போன்றன தாயகத்தில் தடை செய்யப்பட்டுள்ளன. எனவே அவர்களோடு இணைவது தாயகத்தில் இருப்பவர்களுக்கு ஆபத்தானது. தமிழகத்திலும் அப்படித்தான். இதனால் தாயகம் - தமிழகம் - புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம் ஆகிய மூன்று பரப்புகளும் ஒன்றிணையத்தக்க ஒரு பொதுக்கட்டமைப்பை அனைத்துலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சிவில் வெளியை திறக்க வேண்டும். அதன் மூலமாகவே புலம்பெயர்ந்த தமிழ் பரப்பிலிருந்து அறிவும் பணமும் ஏனைய உதவிகளும் பரிமாறப்பட வேண்டும். இல்லையென்றால் தாயகத்தில் மிக அரிதாக தோன்றும் அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தோடு கொண்டிருக்கும் உறவுகள் காரணமாக ஆபத்துக்குள்ளாகும் நிலைமைகள் ஏற்படலாம். எனவே இங்கு முக்கியமாக எடுக்கப்பட வேண்டிய முடிவு அதுதான்.

தாயகம் - தமிழகம் - புலம்பெயர்ந்த தமிழ்ப்பரப்பு ஆகிய மூன்று பரப்புகளையும் ஒன்றிணைக்கும் ஒரு இடையூடாட்டத் தளமாக கருதத்தக்க ஒரு கட்டமைப்பை முதலில் உருவாக்க வேண்டும். அந்த கட்டமைப்புக்கூடாவே நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டங்கள் பொருத்தமான வடிவத்தில் பொருத்தமான நேரத்தில் தீர்மானிக்கப்பட வேண்டும். சில தனிநபர்களின் தன்னார்வமான போராட்டங்கள் அல்லது தியாகங்கள் மக்களை ஒரு உணர்ச்சி புள்ளியில் இணைக்க உதவும். ஆனால் சில சமயம் ஒருங்கிணைக்கப்படாத போராட்டங்கள் தொடர்ச்சியற்ற போராட்டங்கள் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த போராட்ட உணர்வை நீர்த்துப் போகச் செய்துவிடும். எனவே இது விடயத்தில் உடனடியாக ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும். உண்ணாவிரதம் இருக்கும் அப்பெண்மணியின் பசியை முன்னிறுத்தியாவது தமிழ்ச்சமூகம் இது குறித்து சிந்திக்குமா?

**நிலாந்தன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## அம்பிகை செல்வகுமாரின் உண்ணா நோன்பும், ஐ.நா கூட்டத்தொடரும்

ஐ.நா. மனித உரிமையின் 46வது கூட்டத்தொடர் தற்பொழுது இடம்பெற்று வரும் நிலையில் தமிழர்களுக்கான பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பான நிலைப்பாடானது கூட்டத்தொடர் ஆரம்பித்த உடனேயே பூச்சிய வரைபாக காணப்பட்டதுடன் அவ் வரைபுகளில் தமிழர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கான எந்த வொரு விடயமும் பிரதானமாக உள்வாங்கப்படவில்லை என்பதுடன் ஓர் கொதிநிலையற்ற தொடராகவே இக் கூட்டத்தொடர் காணப்பட்ட நிலையில் இக் கூட்டத்தொடரை தமிழர்களின் பக்கமும் திருப்பவும் பிரித்தானியாவின் கவனத்தை ஈர்க்கவும் கடந்த பெப்ரவரி 27 தொடக்கம் நீராகாரம் அருந்தி சாகும் வரை உண்ணா நோன்பு இருந்து வரும் அம்பிகை செல்வகுமாரின் உணவு தவிர்ப்பு போராட்டம் 17 நாட்கள் கடந்த நிலையில் இடம்பெற்று வருகின்றது.

உடல் நிலை மிகவும் மோசமடைந்து உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கும் நிலையில் அவ் உண்ணா நோன்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடகிழக்கு பகுதி எங்கும் அகிம்சை ரீதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் பல்வேறு பிரதேசங்களில் எழுச்சி போராட்டமாக மாறிவருவதுடன் இந்தியாவில் தமிழ் நாட்டில் உள்ள ஈழ உணர்வாளர்கள் அன்னையின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

அத்துடன் பிரித்தானிய உட்பட பல புலம்பெயர் நாடுகளிலும் அன்னையின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து எழுச்சி போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் ஐ.நா கூட்டத்தொடர் ஆரம்பித்த பொழுது பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகள் இலங்கை மீது அழுத்தம் அற்ற விடயங்களை கையாளுவது போல் இருந்த நிலையில் அம்பிகை செல்வகுமாரின் போராட்டத்திற்கு பின்னர் பிரித்தானியாவின் உயர்மட்டங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் தமிழர் பகுதிகளிலும் தமிழ்நாட்டில் உள்ள ஈழ உணர்வாளர்களும் புலம் பெயர் தேசத்தில் உள்ள அனைத்து மக்களும் அன்னையின் போராட்டத்திற்கும் அவரது தியாகத்திற்கும் மதிப்பளித்து ஓர் அணியில் இணைந்து சாதவீக ரீதியான போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதுடன் இக் கூட்டத்தொடரில் தமிழர்களுக்கான நீதி கிடைக்க அறவழிப்போராட்டங்களை மேற்கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும். பல்கலைகழக மாணவர்கள் அன்னையின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சுழற்சி முறை உண்ணா நோன்பு போராட்டம் இடம் பெற்று வரும் நிலையில் எதிர் வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் எழுச்சி போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. கட்சி பேதமின்றி அனைத்து மக்களையும் போராட்டத்திற்கு அழைத்து நிற்கின்றனர். இச் சாத்வீக போராட்டத்திற்கு காலம் உணர்ந்து எமது மக்களுக்கான தீர்வை பெற அனைவரும் ஓரணியில் இணைய அனைத்து தமிழினமும் வேண்டி நிற்கின்றது.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

## 140

மக்கள் வாழ்விடத்திற்கருகில் பதுங்கு குழிகள் தோண்டப்பட்டிருந்தால், முட்கம்பிவேலி போடப்பட்டிருந்தால், தொலைபேசித் தந்தித்தொடர்புக் கடத்திகள் தொங்கிக்கொண்டிருந்தால், அந்த மக்கள் வாழ்விடத்தில் எதிரி .ருக்கின்றான் என்று அர்த்தமாகும். கூடியளவான நடமாட்டங்கள், நாய் குரைத்தல், குதிரைகள் கனைத்தல் - இவை யாவும் தெரிவிப்பதன் பிரகாரம், மக்கள் வாழ்விடம் எதிரிப்படைப் பிரிவுகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்பதாகும். கிராமத்தில் மயான அமைதி நிலவி எந்தவொரு மனிதனையும் காணவில்லையென்றால், இதுவும் சந்தேகத்திற்கிடமானதே. இங்கே எதிரியின் பதுங்கித் தாக்குதலணி இருக்கக்கூடும்.

எதிரியின் கட்டளையகங்கள் வழக்கமாகத் தனியான கட்டடங்களில் இருக்கின்றன - பாடசாலைகள், சங்கங்கள், தனிவீடுகள், தொலைத்தொடர்புக் கட்டங்கள், முன்னைய விவசாயச் சங்கக் கட்டடங்கள், கூட்டுப்பண்ணைத் தலைமையகங்கள் போன்றன. செய்தி சேகரிக்கும் நிலைகளை வழக்கமாகப் பாசிஸ்டுக்கள் பிரதான கட்டடத்திற்கு வெளியில் வைத்திருப்பார்கள். ஏனெனில் பாதசாரி மற்றும் குதிரைத் தகவல் வீரர்கள், உந்துருளியாளர்கள், தொடர்பு வாகனங்கள் போன்றவற்றின் கூட்டம் உருவாவதைத் தடுப்பதற்காகும்.

கட்டளையகத்தின் அறிகுறிகள்
*1:* அடர்த்தியான வரிசையில் தொலைபேசித் தந்திக் கடத்திகள், இவற்றில் கூடுதலானவை தடித்த இறப்பர்க் காப்பைக் கொண்டவையாகவும் பல வண்ணங்களிலும் இருக்கின்றன, கடத்திகள் கம்பங்களிலும் மரங்களிலும் கட்டப்பட்டிருக்கும் அல்லது தரையில் கிடக்கும். அத்துடன் கட்டளையகங்கள் இருக்கின்ற பல்வேறு பக்கங்களுக்கும் பிரிந்து செல்லுதல்,

*2:* இப் பிரதேசத்தில் கூடுதலானளவில் எதிரியின் அதிகாரிகள் இருப்பார்கள்,

*3:* சுற்றிவரவுள்ள பிரதேசத்தில் வானொலி நிலையங்கள், தகவல் சேகரிப்பு நிலையங்கள், கட்டளையகத்தின் இலகு மற்றும் சிறப்பு வாகனங்கள் போன்றன காணப்படும். இவற்றைப் பாசிஸ்டுக்கள் புதர்களுக்குள்ளும் மரங்களுக்கிடையிலும் கொட்டகைகளுக்குள்ளும் பந்தல்களின் கீழும் உருமறைத்து வைத்திருப்பார்கள்.

கட்டளையகம் எவ்வளவு பெரிதாகவுள்ளதோ, அவ்வளவுக்கு இவ்வாறான அறிகுறிகளும் கூடியளவில் காணப்படும்.

செய்தி கொண்டு செல்பவர்களதும் உந்துருளியாளர்களதும் வாகனங்களதும் தொடர்ச்சியான நகர்வு, அருகில் தகவல் சேகரிப்பு நிலையங்கள் இருக்கின்றதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இப் பிரதேசத்திலேயே எதிரியின் படைக் கட்டளையகத்தையும் தேடு. கள வானொலி நிலையம் - இது அமைந்துள்ள இடத்தில், இதனது சைகைக்கடத்திக் கம்பி (அன்ரெனா) அல்லது வானொலி அலைவாங்கிக் கம்பம் தெரியும் இயந்திரத்தினதும் மின்பிறப்பாக்கியினதும் தொடர்ச்சியான சத்தம் கேட்கும் வானொலித் தகவலை நிலையத்திற்குக் கொண்டு செல்கின்ற தொடர்பாளர்களின் நகர்வு தெரியும்.

எதிரியின் விமானத்தளம்

*1:* இயங்கிக் கொண்டிருக்கின்ற தளம் - இதனை இயந்திரத்தின் சத்தம், ஏதாவதொரு இடத்தில் விமானங்களின் பறப்பு மற்றும் தரையிறங்கல், சைகைக்குண்டுகள் மற்றும்வெளிச்சங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் இயந்திரச் சுடுகலன்கள் அருகில் காணப்படுதல் போன்றவற்றைக் கொண்டு இனங்காணலாம்.

*2:* மேலதிக தளம் - தயார்ப்படுத்தப்பட்டுள்ள ஓடுதளம், சகல சாத்தியமான கட்டமைப்புகள் (நிலவறைகள், எரிபொருள் களஞ்சியம், திருத்த நிலை போன்ற பல) காணப்படுதல் போன்றவற்றைக்கொண்டு இதனை இனங்காணலாம். மேலதிக விமானத்தளம் வழக்கமாகக் காவலாளர்களால் காவல் காக்கப்படுகின்றது.

தடயங்களைக் கொண்டு அறியக் கற்றுக்கொள்

கடந்து சென்ற மனிதன் அல்லது குழுவொன்றைச் சேர்ந்த ஆட்கள் அடிக்கடி தமக்குப் பின்னால் வெவ்வேறான தடயங்களை விட்டுச்செல்கின்றார்கள். அவற்றைக்கொண்டுயார் இதனைக் கடந்து சென்றுள்ளார்கள் என்பதை அறிந்துகொள்வாய். தெரியாத மொழியினாலான பத்திரிகைத் துண்டு புரியாத குறிகளுடனான வெண்சுருட்டுத் துண்டுகள் பிறநாட்டுப் பெயர் பதிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு வெற்றுடப்பாக்கள், பிறநாட்டு .ராணுவ உடையைச் சேர்ந்த தவறவிடப்பட்ட பொத்தான்கள் போன்றவற்றைக் கண்டுபிடிப்பாயானால், அப்பாதையால் எதிரி சென்றுள்ளான் என்பதைத் தெரிந்துகொள்கின்றாய்.

ஆனால் எந்தப் படைப்பிரிவு சென்றுள்ளது? இதனைத் தரையிலுள்ள தடங்களைக் கொண்டு அறியலாம். அவற்றை ஆராய்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**



# கோட்டபாயவின் அபிவிருத்தி அரசியலும் சிறுபான்மை இனங்களின் அவலநிலையும்

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது தொடக்கம் வந்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் சிறுபான்மை இனங்களை அடக்கியாள்வதிலேயே குறியாக இருந்து வந்த சம்பவங்கள் வரலாறுகளின் தொடர்கதையாக இருந்து வருகின்றன. S.W.R.D பண்டாரநாயக்க பிரதமராக இருந்தபொழுது தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டு முதலாவது மொழி அடக்குமுறை கொண்டு வரப்பட்டது. அதற்கு பின்னர் ஆட்சியில் அமர்ந்த ஒவ்வொரு பிரதமர்களும் தாங்கள் சிங்கள மக்களை திருப்திபடுத்தவும் தமது ஆட்சியை தக்க வைக்கவும் பல்வேறு அடக்குமுறைகளை கையாண்டு உள்ளனர். அவற்றில் ஸ்ரீ சட்டம் கொண்வரப்பட்டு தமிழ் பெண்களின் மார்புகளில் ஸ்ரீ என்ற சிங்கள எழுத்தில் குத்தப்பட்ட வரலாறுகள் உள்ளன. அக்கால ஆட்சியில் பல தமிழ் அரசியல்வாதிகள் அவர்களது அமைச்சரவையில் அமைச்சர்களாக அங்கம் வகித்த வரலாறுகளும் உள்ளன. டட்லி சேனாநாயக்க அவர்கள் பிரதமராக இருந்த பொழுது ஜீ.ஜி. பொன்னம்பலம் மற்றும் சி.சிற்றம்பலம் அவர்களும் அமைச்சு பதவிகளை அலங்கரித்துள்ளனர். 1978 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் ஆட்சிபீடமேறி அதுவரை பிரதமருக்கான அதிகாரங்களை குறைத்து ஜனாதிபதி முறையை கொண்டுவரப்பட்டதுடன் அது நிறைவேற்று அதிகார முறையாக அமைந்தது. அந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை வைத்து தமிழர்களை அடக்கி ஒடுக்கி அவர்களை சிதைக்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டார்.

அத்துடன் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என தமிழர்கள் ஆயுத பலமின்றி இருந்த காலத்தில் தமிழர்களை பார்த்து அவர் முழக்கமிட்டார். அத்துடன் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களால் மறக்க முடியாத ஜீலைக்கலவரத்தின் போது அவர் அயல்நாட்டு தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் இக்கலவரத்தை பற்றி தொலைக்காட்சி நிரூபர் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதிலானது தனது சிங்கள மக்களை குளிரவைக்கவும் தான் ஓர் பௌத்த சிங்கள தலைவன் என்றும் தனியே இலங்கை நாட்டில் சிங்கள மக்களுக்கான தலைவன் என்பதை அப்பேட்டியில் அவர் உரைத்திருந்தார். அது எதுவெனில் தமிழ் மக்கள் தன்னை பற்றியோ இக் கலவரத்தை பற்றியோ என்ன நினைக்கின்றார்கள் என்பதை பற்றி தனக்கு கவலையில்லை. எனது சிங்கள மக்கள் என்னை பற்றி என்ன நினைப்பார்கள் என்பது தான் தனது தற்போதைய கவலை என பெரும் ஏக்கத்துடன் கூறி நின்றார். அதன் பின்னர் ஆட்சியில் அமர்ந்த ஆர் பிரேமதாச அவர்களும் தமிழர்கள் மீதான தனது ஒடுக்குமுறைகளையும் பொருளாதாரத் தடைகளையும் திணித்து பெரும் நெருக்கடியை ஏற்படுத்தினார்.

அதன் பின்னர் வெள்ளை புறாவாகவும் சமாதான தேவதையாகவும் தன்னை வர்ணித்து இனவாதிகளால் தனது கணவனை இழந்துள்ளேன். ஆகவே அந்த துயர் தனக்கு தெரியும் என்றும் தமிழ் மக்களின் துயரங்களை அறிவேன் என பாசாங்கு வார்த்தை கூறி ஆட்சியில் அமர்ந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் வடகிழக்கு பகுதிகளில் பல அப்பாவி தமிழர்களை குழிதோண்டி புதைத்த வரலாறும் பாரிய இடம்பெயர்வு அவலத்தை கொடுத்து செம்மணி புதைகுழி நாவாலி சென்பீற்றர் தேவாலய படுகொலை என பல படு கொலைகள் இவர் ஆட்சியில் இடம்பெற்றதை தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள். அதன் பின்னர் ஆட்சியில் அமர்ந்த மகிந்த ராஜபக்ச அவர்கள் இலங்கை ஆட்சியாளர் வரலாற்றில் தமிழ் மொழியில் சில வார்த்தைகள் பேசக்கூடிய முதலாவது ஜனாதிபதி என்ற பெருமையை காட்டி தமிழ் மக்களின் இன விடுதலைப்போரை முள்ளிவாய்க்கால் மண்ணில் உலக வல்லரசுகளின் உதவியுடன் அழித்ததுடன் பல்லாயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களும் கொல்லப்படவும் பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போன வரலாற்று நிகழ்வுக்கு காரணமான படை நடவடிக்கைகளுக்கு பொறுப்பு வாய்ந்த ஜனாதிபதியாக பதவி வகித்தவர் அத்துடன் யுத்தம் முடிவுற்றதன் பின்னரான வடகிழக்கு அபிவிருத்திகள் இவர் காலத்தில் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டதுடன் கண்டி - யாழ்ப்பாணம் A9 வீதி கார்பட் வீதியாக போடப்பட்டதுடன் 1990 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இன மோதல் காரணமாக தடைபட்டு இருந்த கொழும்பு - காங்கேசன்துறை புகையிரத சேவையை மீண்டு ஆரம்பித்து வைத்த பெருமை இவரையே சாரும் அத்துடன் யுத்தத்திற்கு பின்னரான வடகிழக்கு பகுதிகளில் பலவீட்டு திட்டங்களை உருவாக்கி பலருக்கு வீடுகள் வழங்கி வைத்த பெருமை இவரையே சாரும். மகிந்த ராஜபக்ச அவர்களின் ஆட்சியின் பின்னர் 2015 - 2019 வரை நல்லாட்சி என்ற போர்வையில் இடம்பெற்ற ஆட்சியில் தமிழ் மக்களுக்கான எதுவித பொருளாதார அபிவிருத்திகள் எதுவும் கிடைக்கப்பெறாமல் இராணுவ அடக்குமுறைகள் மட்டும் இல்லாமல் இருந்த ஒரே ஆட்சி என்ற பெருமையுடன் அவ்வாட்சி விடைபெற்று சென்றது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றிபெற்ற கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றார் அவர் பதவியேற்றவுடன் இலங்கை முழுவதும் இராணுவப் பிரசன்னம் அதிகரித்ததுடன் சிறுபான்மை இனங்களை அடக்கியாழ்வதில் அவரது கவனம் திரும்பிய நிலையில் அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் தொலைக்காட்சி நிரூபருக்கு கூறியதை இன்று கோட்டபாய ராஜபக்ச அவர்கள் செயற்பாட்டில் செய்து வருகின்றார்.

தமிழர்கள் தன்னை பற்றி என்ன நினைப்பார்கள் என்ற கவலை எதுவும் இல்லாமல் தனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த சிங்கள மக்களை திருப்திபடுத்த அவர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தமிழர்களை வேதனைப்படுத்துவதாகவே அமைகின்றது. தமிழ் மக்களின் தமது உறவுகளுக்கான நினைவேந்தலை தடுத்து நிறுத்தியதுடன் தமிழ் மக்களின் சமய அனுஸ்டானங்களை கூட செய்யவிடாது தடுத்தல் தொல்பொருள் ஆய்வு எனக்கூறி தமிழ் மக்களின் தொன்மையான இந்துக்கோவில்களை அழிப்பதுடன் அவ் நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகள் கிழக்கு மாகாணங்களில் மேய்ச்சல் தரைகளை அபகரித்தல் எல்லை மீறிய சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்கள் தமது உரிமை கோரி சமய கலாச்சார விழுமியங்களை பாதுகாக்க அறவழிகளில் போராட்டங்கள் நடத்தினால் அதனை பாதுகாப்பு படையினர் மற்றும் காவல்துறையினர் நீதிமன்றங்கள் ஊடாக தடுத்து நிறுத்துவதுடன் அவ் அறவழி போராட்டங்களில் தலைமையேற்றவர்களை விசாரணை செய்து அச்சுறுத்துவது வடபகுதியில் உள்ள முக்கியமான தீவுகளை சீனாவுக்குவழங்குவது வடகிழக்கு பகுதிகளில் யுத்தம் முடிவுற்றது பின்னர் தமிழர்களின் பூர்வீக காணிகளில் படையினர் நிலைநிறுத்தி இருப்பதுடன் அக்காணிகளை அரச உடைமையாக்க முயற்சித்தல் அண்மையில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான ஆவணங்களை வட மாகாண அலுவலகத்திலிருந்து இரவோடு இரவாக அநுராதபுரத்துக்கு காரணமின்றி மாற்றப்பட்டமையானது தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்ச்சியையும் பலத்த சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது. அதுவும் வடமாகாணம் முழுவதும் இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் அதனை பயன்படுத்தி இடம்பெற்ற இந்நிகழ்வு பல மட்டங்களில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இதனை கண்டித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார். மேலும் பச்சிலைபள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மூவாயிரம் ஏக்கர் காணியில் சிங்கள குடியேற்றம் இடம்பெறுவதற்காக இவ் ஆவணங்கள் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அங்குள்ள மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



முஸ்லிப் மக்களின் ஜனாசா எரிப்பு விவகாரத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து எதிர்ப்பு தெரிவித்து போராடிய நிலையில் அரசு எதுவித விட்டுக்கொடுப்பும் செய்யாமல் அவர்களின் ஜனாசாக்களை எரித்து வந்த நிலையில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து போராடத்தொடங்கியதை அடுத்து மற்றும் பாகிஸ்தான் பிரதமரின் வருமை அத்துடன் பல இஸ்லாமிய நாடுகளின் கண்டனங்கள் எல்லாவற்றையும் பார்த்த அரசு இறுதியாக ஜனாசாக்களை அடக்கம் செய்ய அனுமதியளித்து முஸ்லிம் மக்களை திருப்திப்படுத்திய கையோடு ஈஸ்டர் தாக்குதல் பின்னர் இலங்கையில் செயற்படும் 11 முஸ்லிம் அடிப்படைவாத கட்சிகளை தடை செய்வதுடன் அதன் தலைவர்களையும் கைது செய்ய உள்ளதாக தெரியவருகின்றது.

இது ஒரு பக்கம் சிரித்த முகமும் மறுபக்கம் தனது இனவாத அடிப்படை அரசியல் முகத்தையும் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றார். முஸ்லிம் மக்களுக்கோ முஸ்லிம் தலைமைகளுக்கோ எவ்வித விட்டுக்கொடுப்பும் செய்யவில்லை என்பதை தனது பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு காட்ட முயற்சிக்கின்றார். சிங்கள மக்களையும் பௌத்த தேரர்களையும் திருப்திப்படுத்த இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளை தடை செய்வதாக கூறியுள்ளார். அடுத்து தொல்பொருள் ஆய்வுகள் என்று இந்து மக்களின் பல தொன்மையானகோவில்களின்விக்ரங்களை அழிப்பது அவற்றை மறைப்பதும் அதற்கு பௌத்த கோவில்கள் இருந்த இடம் என அடையாளப்படுத்தி வந்த நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல போராட்டங்கள் இனமத பேதமின்றி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை போராட்டம் தொல்லியல் ஆய்வு எதிர்ப்பு தொடக்கம் பல விடயங்கள் உள்ளடங்கியதாக மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்துக்களின் முக்கிய தினமான சிவராத்திரி தினத்தை சிறப்பாக கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்சர் அவர்கள் அனுமதி வழுங்கியதுடன் இந்து சமய காலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் 1988 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்து கலைக்களஞ்சிய உருவாக்க பணி மீள்பதிப்பு செய்யப்பட்டு இந்து கலைக்களஞ்சியத்தின் ஆரம்ப பிரதிகள் இந்து சமய புத்தசாசன அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ச அவர்கள் வெளியிட்டதுடன் இந்து மதகுருமார்களுக்கு கையளித்துள்ளார். இந் நிகழ்வில் டக்ளஸ் தேவானந்தா அங்கஜன் இராமநாதன் சுரேஸ் ராகவன் இந்து மதகுருமார்கள் ஆதினமுதல்வர்கள் கலாச்சார அமைச்சின் செயலாளர் கபில குணவர்த்தன என பலர் கலந்து கொண்டனர். அன்று பிரதமர் வழங்கி அறிவுறுத்தலுக்கு அமைய சைவத் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் மகா சிவராத்திரி நிகழ்வினை சிறப்புற நிகழ்த்த ஒவ்வொரு ஆலயத்துக்கும் ரூபாய் 50,000 நிதியுதவி வழங்கும் செயற்திட்டமும் இடம்பெற்றது. இதுவொரு நல்லதொரு விடயம் பாராட்டத்தக்க விடயம். மத நல்லினக்கத்துக்கான சுமூகமான விடயம் ஆனால் பிரதமர் அவர்கள் இவ்வாறான செயற்பாட்டுக்கு பலரும் நன்றி தெரிவித்துள்னர். இந்து மதகுருமார்கள் நன்றிகளை தெரிவித்துள்ளனர். இவ்வாறு நிதிகளையும் இந்து கலைக் களஞ்சியங்களையும் வெளியிடும் பிரதமர் தனது கட்டுப்பாட்டில் உள்ள இந்து சமய புத்தசாசன விவகார அமைச்சு தொல்பொருள் ஆய்வு எனக்கூறி இந்து மக்களின் ஆலயங்களையும் அதன் நிலங்களையும் அபகரித்து அவ்விடயங்களில் பௌத்த விகாரைகளை அமைக்கும் முயற்சிக்கு ஏன் தடை போடாமல் உள்ளார்.

குறிப்பாக வெடுக்குநாரி திருகோணமலை வெந்நீர் ஊற்று பிரச்சனை என பல பிரச்சனைகளுக்கு தீர்வுகள் இன்றி உள்ள நிலையில் பிரதமர் இதற்கான தீர்வை வழங்க முன்வராமல் இவ்வாறான நிதிகளை ஒதுக்குவதும் புத்தகங்களை வெளியிடுவதும் குழந்தையை கிள்ளிவிட்டு அழும் குழந்தைக்கு கிள்ளியவாரே இனிப்பு கொடுத்து ஆற்றுவது போலானது இவ்விடயம் அத்துடன் கோட்டபாய ராஜபக்ச அவர்களின் தற்போதைய ஆட்சியில் பல அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்புக்களுக்கான வர்த்தமானி அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு பின்னர் அவைகள் திரும்ப பெறபட்டதுடன் சில வர்த்தமானி அறிவிப்புகளின் பிரேரணை எது வித செயற்பாடுகளும் இடம்பெறவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அறிக்கைகள் எதுவும் திருப்திகரமானதாக இல்லை என கொழும்பு கத்தோலிக்க மேற்றானியர் தொடக்கம் எதிர்கட்சி மற்றும் பௌத்த மதகுருமார்கள் வரை விசனம் வெளியிட்டு வருகின்றனர். அரசியல் காழ்புணர்ச்சிகளும் அரசியல் பழிவாங்கல்களும் இவ் ஆட்சியில் மிக வேகமாக இடம்பெற்று வருவதாக எதிர்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். பொருளாதார நெருக்கடி மிகவும் மோசமான நிலையில் உள்ளது பல தொழிற்சங்கங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர். இவ் அரசின் ஆட்சியில் இதுவரை இடம்பெற்ற விடயங்களில் பாதாள உலக கும்பலை அடக்கியதும் கொரோனாவை கட்டுப்படுத்தியதும் என ஆட்சி தொடர்ந்து கொண்டுள்ளது. தமிழர்களுக்கான தீர்வோ சொல்லக்கூடியளவான அபிவிருத்தியோ இடம்பெறவில்லை என்பதே உண்மை.

11ஆம் பக்கம் பார்க்க...

**தாயகத்தான்**

# சீனா, இந்தியா, அமெரிக்கா – இலங்கை விவகாரத்தில் எதை சாதிக்க நினைக்கின்றது

இந்தோ பசுபிக்கின் பட்டுபாதையாக இலங்கை விளங்குகின்றது. தென்னிந்தியா படையெடுப்புகள் தொடக்கம் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இறுதியாக ஆங்கிலேயர் ஆட்சி வரை இலங்கை மிக முக்கிய பிராந்தியமாகவும் மிகவும் வாசனைத்திரவியங்கள் முதல் பெருந்தோட்ட பயிர்கள் வரை செல்வம் பொழிந்த நாடாக காணப்பட்டது. அத்துடன் ஆசியாவின் மிகப்பெரும் இயற்கை துறைமுகத்தை தன்னகத்தே கொண்ட நாடாக காணப்படுகின்றது. இதன் காரணமாக ஆசியா, ஐரோப்பிய, பசுபிக் வல்லரசுகளின் மிகவும் தேவைப்படும் வேண்டப்படும் நாடாகவும் தங்களின் பிராந்திய பாதுகாப்புக்கும் தாங்களின் இராணுவ பொருளாதார வல்லமையை நிரூபிக்கும் ஒரு தளமாகவும் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆசிய வல்லரசுகள் இலங்கையை பயன்படுத்த நினைக்கின்றார்கள்.

இலங்கையில் தமிழர்கள் தமது தாயகம் சுயநிர்ணயம் கோரி சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு போராடி வருகின்றார்கள். தன்னாட்சி உரிமை கோரி போராடிய தமிழர்களுக்கு ஆரம்பத்தில் ஆதரவு கரம் நீட்டி அதனை வளர்த்தெடுக்க உதவி புரிந்து அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி பல்வேறு வழிகளில் உதவி புரிந்த எமக்கு அருகில் உள்ள பாசக்கார நாடான இந்தியா காலபோக்கில் தனது சுயரூபத்தை காட்டியதுடன் ஆதரவுக்கரம் கொண்டு வளர்த்த தமிழினத்தின் ஆயுத பலத்தை தனது பிராந்திய சுயநலனுக்காகவும் தான் உலகின் மிகப்பெரும் வல்லரசு என்ற குரூர புத்தியுடனும் அருகில் உள்ள நாடுகள் தனது சிற்றரசு என்ற நினைப்புடனும் அப்பாவி தமிழ் மக்களையும் அவர்களது ஆயுத பலத்தையும் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைக்க வழிசமைத்தவர்களில் தானும் ஒருவராக வரலாற்றில் கறைபடிந்த நாடாக மாறிப்போனது இலங்கை எப்பொழுதுமே தனது கைமீறி போகாது இந்தியா பார்த்து வந்துள்ளது.


1960 ஆண்டுகளில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் இந்தியாவின் மிக முக்கிய இடமான கச்சதீவை இலங்கைக்கு வழங்கி இலங்கை அப்போது சீன அமெரிக்கா பக்கம் சாராமல் இருக்க வழிசமைத்தார். அதன் பின்னர் 1978 ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள். தனது ஆட்சியில் வெளியிறவுக் கொள்கையில் இந்தியாவை ஒதுக்கி தனது பார்வையை இஸ்ரேயல் அமெரிக்கா மீது திருப்பி இருந்தார். இதனால் இந்தியா சற்று கோபமடைந்து இலங்கை தனது வழிக்கு கொண்டுவர வடகிழக்கு பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கி இலங்கை அரசுடன் மோதவிட்டு அதன் மூலமாக இலங்கை அரசை தனது பக்கம் கொண்டுவர முயற்சித்தமை. அதன் பின்னர் 1987 இலங்கை - இந்தியா ஒப்பந்தம் செய்து தனது இராணுவத்தை இலங்கைக்கு அமைதிப்படை என்ற பெயரில் அனுப்பி தனது இராணுவ பலத்தின் மூலம் இலங்கையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சித்தமை.

2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச அவர்கள் பதவியேற்றவுடன் அவரது வெளியுறவுக் கொள்கையில் பிரதான பங்கு வகித்த நாடு சீனா 2007 ஆம் ஆண்டு தமிழர்களுடனான இறுதிப் போருக்கு இலங்கை அரசு பல நாடுகளிடம் உதவி கோரியது. குறிப்பாக இந்தியாவிடம் முதலில் உதவி கோரியது இது இந்தியாவுக்கும் மிகவும் சங்கடமான விடயமாக அப்போது இருந்தது. இவ் யுத்தத்துக்கு உதவி புரிந்தால் தமிழ் நாட்டில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி பெரும் நெருக்கடி ஏற்படும் எனக்கருதிய இந்தியா உதவியழிப்பதற்கு மறுத்திருந்தது. உடனடியாக இலங்கை சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் அமெரிக்காவிடமும் உதவி கோரிய பொழுது சீனா மிக அதிகமான இராணுவ தளபாட உதவிகளை வழங்க ஒப்புக்கொண்டது. இதனையடுத்து இந்தியா தானும் உதவி செய்ய முன் வந்ததுடன் குறிப்பிடத்தக்க ராடர் கருவிகளையும் இறுதி யுத்தத்தில் தனது இராணுவத்தை அனுப்பி அவ் யுத்தம் கொடூரமாகவும் கொத்துக்கொத்தாக அப்பாவி தமிழினம் அழிய தனது கையை ரத்த வாடையாக்கியது.

சீனா - இலங்கை உறவானது யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி செயற்பாட்டில் மேலும் வலுப்பெற்றது. அத்துடன் அவ் அபிவிருத்தியில் ஒருபகுதி இந்தியாவுக்கும் வழங்கப்பட்டது. ஆனால் மிகப்பெரும் பங்கு சீனாவுக்கே வழங்கப்பட்டதுடன் சீனாவின் முக்கிய தொழில் மையங்கள் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் காலிமுகத்திடல் அமைக்கப்படும் பூட்சிற்றி என்பன சீனாவுக்கு வழங்கப்பட்டது. இதனால் இந்தியா மிகவும் கலக்கமடைந்தது. இருந்த பொழுதிலும் சிங்கள ஏகாதிபத்திய அரசுகள் மிகச்சாதூரியமாக இந்தியாவுக்கு திருகோணமலை துறைமுகத்தின் ஒரு பகுதியை வழங்கி மிகச் சாதூரியமாக இரு நாடுகளையும் தங்களின் கைகளில் வைத்துக்கொண்டு தமிழின அழிவுக்கான நீதியை மூடி மறைத்து சாதூரியமாக தப்பி வருகின்றார்கள். அண்மைக்காலமாக சீனா உலகின் மிகப்பெரும் வல்லரசாக உருவெடுத்து வருவதுடன் பொருளாதார ரீதியாக அபரிதமான வளர்ச்சியை பெற்று வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் சீனாவின் இவ் விஸ்வரூப வளர்ச்சியானது இந்தியாவுக்கு மிகவும் பாதகமான நிலையை தோற்றியுள்ளதுடன் இந்தியா எல்லைப்பகுதியில் இந்தியாவை சீண்டும்நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுகின்றது.

சீனா இந்தியா எல்லைப்பகுதியான லாடய் பகுதியில் இருநாட்டு படைகளும் குவிக்கப்பட்டு போர் சுழல் ஒன்று அங்கு உருவாகியது. பின்னர் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் மூலம் இருநாட்டு படைகளும் அவ் எல்லையில் இருந்து பின்வாங்கி சென்றுள்ளன. அடுத்து சீனாவின் இவ்வாறான வளர்ச்சி அமெரிக்காவுக்கு மிகுந்த தலையிடியை கொடுப்பதுடன் சீனாவின் வடகொரியாவுடனான நட்பானது அமெரிக்காவை மிகவும் சீண்டுவதாக உள்ளதுடன் சீனா, ரசியா, ஈரான் ஆகிய நாடுகளின் கூட்டு இராணுவ கடற்படை பயிற்சியானது அமெரிக்காவை மேலும் விசனத்துக்கு உண்டாக்கியுள்ளது. அத்துடன்சீனாவின்இலங்கைக்கானஉறவும் ஒருவகையில் அமெரிக்காவுக்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் அமெரிக்காவின் கடல்வெளி போக்குவரத்தை கண்காணிக்க சீனா இலங்கையை பயன்படுத்த முயற்சிப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. அத்துடன் தற்பொழுது ஆட்சியில் உள்ள கோட்டபாய ராஜபக்ச அவர்களின் சீனாவுடனான வெளியுறவுக்கொள்கை மேலும் வலுப்பெற்ற சூழ்நிலையுள்ளது.

தற்பொழுது ஐ.நா மனித உரிமையின் 46வது கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் அக்கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானங்களை தனது கேந்திர முக்கியத்துவம் தனது நாட்டு அமைவிடம் ஆகியவற்றை பயன்படுத்தி சீனா,



இந்தியா, அமெரிக்கா போன்ற வல்லரசுகளை தனது பக்கம் திருப்பி கொண்டுவரப்படவுள்ள தீர்மானங்களில் இருந்து தப்ப தனது இராஜதந்திர காய் நகர்த்தலை இலங்கை மேற்கொண்டு வருகின்றது. தமிழர்களுக்கு இறுதி யுத்தத்தில் ஏற்பட்ட பேரழிவுகளுக்கும் அவ் யுத்த முடிவின் போது கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான முடிவு பற்றியும் யுத்தத்தின் பின்னரான இவ் அரசின் இராணுவ அடக்குமுறைகளும் நில அபகரிப்புக்களுக்கும் பொறுப்புகூறலை இவ் ஐ.நா கூட்டத்தொடரில் தமிழினம் எதிர்பார்த்திருக்கும் நிலையில் அது கைவிட்டு போகும் நிலையில் தான் உள்ளது. ஐ.நா கூட்டத்தொடர் இடம்பெறுவதற்கு முன்னர் இலங்கை ஒரு சதுரங்க ஆட்டத்தை இந்தியா, சீனா மீது மேற்கொண்டது. கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவிற்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை இலங்கை அரசு மீளவும் பெற்றுக்கொண்டதையடுத்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர போர் இடம்பெறத்தொடங்கியது. இந்தியா இலங்கைக்கு கொடுத்த 1400 கோடி அமெரிக்க டொலரை திரும்ப உடனடியாக தரும்படி கோரி நின்றது இலங்கை அதனை சீனாவிடம் பெற்று இந்தியாவுக்கு வழங்கியுள்ளதுடன் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு இல்லையென்பதை அழுத்தமாக கூறி நின்றது.

அத்துடன் ஒருபடி சென்று சீனாவுக்கு யாழ்குடா நாட்டில் உள்ள நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு என மூன்று தீவுகளையும் மின்சார செயற்திட்டத்துக்கு வழங்கியுள்ளது. இதற்கு இந்தியா கடும் எச்சரிக்கையை வழங்கி இருந்ததுடன் இந்தியா தனது காய் நகர்த்தலை தொடங்கியது. அதனது ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் மோடி அவர்கள் பலத்த இந்துத்துவ கொள்கையுடையவர். அதன்படி வடகிழக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பாரதிய ஜனதா கட்சியை ஆரம்பிக்க உள்ளதாக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அவர்கள் கூறியுள்ள நிலையில் அது தென்னிலங்கை அரசியல் மட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் பல ஆர்ப்பாட்டங்களை பௌத்த தேரர்கள் மேற்கொண்டுள்ளனர். ஏற்கனவே பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவு கட்சியான இந்துத்துவ கொள்கையுடைய சிவசேன கட்சியின் இலங்கையில் வடபகுதி செயற் தலைவர் ஒருவர் உருவாக்கப்பட்டு கட்சி செயற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில் அடுத்து பாஜகாவின் வரவானது இலங்கைக்கு மேலும் நெருக்கடியை உருவாக்கும் என உணர்ந்த இலங்கை அரசு தனது சாதூர்ய காய் நகர்த்தலை மேற்கொண்டது. இலங்கை விமானப்படையின் 70 வது ஆண்டு நிறைவு விழாவில் இந்தியா விமானப்படையின் விமானங்களை இலங்கையின் கண்காட்சியில் இடம்பெற அழைப்பு விடுக்கப்பட்டது. சுமார் 70 போர் இலகு ரக விமானங்கள் புடைசூழ இந்தியா விமானப்படை அதிகாரிகள் உட்பட விமான ஓட்டிகளுடன் சுமார் 4 தினங்கள் இக்கண்காட்சி காலி முகத்திடலில் இடம்பெற்றது. இதில் இந்தியாவின் தேஜார் ரக போர் விமானங்கள் மற்றும் இந்தியா தயாரிப்பின் உலங்கு வானூர்திகள் என அனைத்தும் சாகசங்களில் ஈடுபட்டதுடன் இந்தியாவானது விமானப்படை வலிமையை இலங்கைக்கு உணர்த்தி நின்றதுடன் இலங்கை விமானப்படைக்கு கொள்வனவு செய்யவுள்ள போர் விமானங்களை இந்தியாவின் தேஜார் ரக போர் விமானங்களை கொள்வனவு செய்ய நிர்ப்பந்தித்துள்ளதாக தெரியவருகின்றது. இதனை இலங்கை, சீனா எதிர்பார்க்கவில்லை. தனது இராணுவ வலிமையை சிங்கள மக்களுக்கும் இலங்கை அரசுக்கும் அது புரிய வைத்துள்ளது என்றே கூறலாம்.

ஆகவே ஐ.நா கூட்டத்தொடரில் தமிழர்களுக்கான நீதியை இந்தியா அரசோ அல்லது அமெரிக்க பிரட்டன் கனடாவோ பெற்றுத்தரப்போவதில்லை என்பது கண்கூடு இவ் ஏகாதிபத்திய வல்லரசு நாடுகள் தமது பிராந்திய நலன்சார் விடயங்களில் இலங்கையின் தேவைப்பாடு அதிகமாக இருப்பதால் தமிழர்கள் பற்றிய அக்கறையோ அல்லது அவர்களின் மனித உரிமை சம்மந்தமான விடயமோ அவர்களது சுயாட்சி தன்னாட்சி தொடர்பானதற்கான தீர்வையே இவ் நாடுகள் பெற்றுத்தரப்போவதில்லை என்பதுடன் ஐ.நா கூட்டத்தொடரிலும் இலங்கைக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்பதுடன் இவ் வல்லரசுகளின் பிராந்திய நலன் சார் ஆட்டத்துக்கு எமது தமிழினம் ஓர் பகடை காயாக பயன்படுத்தி வந்துள்ளதை காலம் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இலங்கை ஆசிய ஐரோப்பிய பசுபிக் நாடுகளின் கேந்திர முக்கியத்துவம் என்ற போர்வையை போர்த்திக்கொண்டு அதனை இலவகமாக தென்னிலங்கை அரசியல் தலைமைகள் பயன்படுத்தி செல்லுகின்றன என்பதே தமிழர்களுக்கான வேதனையான விடயம் இதனை நாமும் எமக்கு சாதகமாக திருப்பி இவ் நாடுகளை எமது பக்கம் திருப்ப இதே கேந்திர முக்கயத்துவத்தை எமது கைகளில் எடுத்தால் வரும் காலங்களில் எமக்கான தீர்வும் நீதியும் கிடைக்கும் என்பது உண்மையே. அதற்குரிய வழியை தேடிச்சென்று அடைவதே எல்லோருடைய எதிர்பார்ப்பாகும்.

**தாயத்தான்**

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் வழிமுறையை அரசு ஏன் கையாளவில்லை

இந்துமா சமுத்திரன் முக்கிய அமைவிடத்தில் இலங்கை அமைந்துள்ளதுடன் இயற்கை துறைமுகத்தையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது. ஆசிய, ஐரோப்பிய, பசுபிக் பிராந்திய கடல் மார்க்க பட்டுப்பாதையில் இணைக்கும் புள்ளியில் இலங்கை அமைந்துள்ளதால் ஆசியா, ஐரோப்பிய வல்லரசுகளின் மிக வேண்டப்பட்ட நாடாக இருப்பது இலங்கைக்கு கிடைத்த ஓர் மிகப்பெரும் கௌரவம் அத்துடன் அபிவிருத்தியடைந்து வரும் நாடாக காணப்படுவதுடன் கல்வி, சுகாதாரத்துறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தியை அடைந்துள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது சுகாதாரத்துறையில் அபரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. இலங்கை தற்பொழுது ஆயுள் எதிர்பார்ப்பு வயதெல்லை 80 ஆக உயர்ந்துள்ளதுடன் சிசு மரணவீதம் மிகவும் குறைந்த அளவில் காணப்படுகின்றது. அத்துடன் பாரிய கொள்ளை நோய்களான மலேரியா சிறுபிள்ளை வாதம் போலியோ காசநோய் தொழுநோய் அம்மைநோய் போன்ற தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் என்பன முற்றாக தடுக்கப்பட்டதுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டளவில் இலங்கையை ஆட்டிப்படைத்த டெங்கு உயிர்கொல்லி நோய் தற்பொழுது அபரிதமான சுகாதார வளர்ச்சியால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன் கல்விக்காக அரசு பாரிய செலவினை செய்து வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இலவச கல்வி, இலவச சீருடை, இலவச உணவு, இலவச பாடப்புத்தகம் என உலக வல்லரசுகள் கூட செய்ய முடியாததை இலங்கை அரசு செய்து வருகின்றமையால் கற்றோர்வீதம் அதிகரித்துகாணப்படுகின்றது. கல்வியறிவு மேம்பட்டுள்ளது. ஆள்வீத வருமானம் முன்னைய ஆண்டுகளைவிட அதிகரித்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவின் வுகான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் இன்று உலகை ஆட்டிப்படைத்து வரும் நிலையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் சுகாதாரத்துறையில் மிகவும் உச்சத்தில் உள்ள நாடுகள் எல்லாம் சின்னாபின்னமாகி வரும் நிலையில் இலங்கை இவ் கொரோனா வைரஸ் உயிரிழப்புக்களை கணிசமானளவு குறைத்துள்ளதுடன் நோய் தொற்றிலிருந்து குணமாகியோரின் அடிப்படையில் மிகவும் உச்சத்தில் உள்ளதுடன் நோய் தொற்றுக்குள்ளானோரின் விகிதத்தின்படி தற்பொழுது 98 வது நாடாக உள்ளது. இங்கு அதன் சுகாதார வளர்ச்சியை புடமிட்டுகாட்டுகின்றது.

இவ்வாறு கல்வி சுகாதாரத்துறைகளில் வளர்ச்சியடைந்துள்ள இலங்கை போதைப்பொருள் பாவனையின் உச்சத்திலும் போதைப்பொருள் விற்பனை முகவர்மையமாகவும் காணப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயம் இலங்கையில் இனப்போர் இடம்பெற்று வரும் காலப்பகுதிகளில் குறிப்பாக வடகிழக்கு பகுதிகளில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல் விற்பனை என்பன முற்றாக இல்லாதொழிக்கப்பட்டு இருந்து வடகிழக்கு மட்டுமல்லாமல் தென்பகுதிகளில் கூட இவ்வாறான போதைப்பொருள்கள் கடத்துவதும் அவற்றை விற்பனை செய்வது குறைவாகவே காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் போதைப்பொருள் பாவனையானது மிகவும் உச்ச நிலையில் காணப்படுவதுடன் போதைப்பொருள் கடத்தல்களும் முன்னெப் போது இல்லாதளவு மிகவும் மோசமாக காணப்படுகின்றது.

குறிப்பாக இப்போதைப்பொருள் விற்பனையாளர்கள் வடகிழக்கு பகுதிகளில் இளம் சமுதாயத்தை குறிவைத்து தமது வியாபாரத்தை மேற்கொள்கின்றனர். ஒரு காலத்தில் மிகவும் இறுக்கமாகவும் போற்றத்தக்க இளம் சமுதாயமாக காணப்பட்ட வடகிழக்கு இளைஞர்கள் இன்று போதைப்பொருள் பாவனையால் மிகவும் பாதிக்கப்பட்டு வேண்டாததவர்கள் போல் காணப்படுகின்றனர். போதைப்பொருள் விற்பனையாளர்கள் முகவர்கள் வேலையில்லா பிரச்சனை குடும்ப பிரச்சனை போன்றவற்றால் விரக்தியில் காணப்படும் இளைஞர்களை இனம்கண்டு அவர்களுக்கு தமது போதைப்பொருட்களை விற்பனை செய்து அவ் சமுதாயத்தை அழித்துவருகின்றனர். அத்துடன் இல்லாமல் இலங்கை அரசு கல்வி வளர்ச்சிக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் நிலை-யலில் இவ் போதைப்பொருள் முகவர்கள் மிக இலகுவாக பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கி வருகின்றமை ஒரு பாதக செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

வருங்கால நாட்டின் விடிவெள்ளிகாக மிளிரப்போகும் இவ் மாணவ செல்வங்களை இவ் கொடூர போதைப்பொருள் விற்பனையாளர்கள் தங்களின் சுயலாப விடயத்துக்காக இவ் மாணவ சமுதாயத்தை அழிப்பதை இவ் அரசானது தடுத்துநிறுத்த வேண்டும். தற்பொழுது ஆட்சியில் உள்ள கோட்டபாய ராஜபக்ச அவர்களின் ஆட்சியில் போதைப்பொருட்களை கடத்துபவர்களை விற்பனை முகவர்களை தடுப்பதற்கு பாரிய செயற்பாடுகளை செய்து வரும் நிலையிலும் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. பல புலனாய்வு அணிகள், விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர், இராணுவ புலனாய்வு அணியினர், காவல்துறையினர் என ஒட்டுமொத்த படைகளையும் இவ் போதைப்பொருள் கடத்தலை தடுக்க களம் இறக்கப்பட்ட நிலையில் பலகோடி பெறுமதியான போதைப்பொருட்களை கைப்பற்றப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு வரும் நிலையிலும் இவ் போதைப்பொருள் வியாபாரம் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. போதைப்பொருட்கள் கடத்துவதற்கும் அவற்றை விற்பனை பண்ணுவதற்கும் இலங்கையின் அமைவிடம் சாதகமாக உள்ளமை இங்கு கவனிக்க தக்கதொரு விடயமாகும். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள ஒரு தீவு இதனால் இந்தியா, பாகிஸ்தான், சீனா மற்றும் மலேசியா போன்ற பல நாடுகளிலிருந்து கடல்வழி மூலமாக மிக இலாவகமாக இங்கு கடத்தப்படுகின்றது. இங்கு கடத்தப்படும் போதைப்பொருட்கள் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றதாக கூறப்படுகின்றது.

இவ்போதைப்பொருள்களைபாவிப்பதால்பல குடும்பங்கள் சின்னாபின்னமாகியுள்ளன. அண்மைக்காலமாக இலங்கையில் இடம்பெறும் குற்றச்செயல்களுக்கு பின்னால் இவ் போதைப்பொருள் பாவனை ஆதிக்கம் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக வடகிழக்கு பகுதிகளில் இடம்பெறும் பாலியல் வல்லுறவுகள், கொலைகள், கொள்ளைகள், வாள் வெட்டுக்கள் என்பன இவ் போதைப்பொருள் பாவனையின் விளைவு என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். இப்போதைப்பொருள் பாவனையால் குழந்தைகள் சிறுமிகள் வயோதிப பெண்கள் உட்பட பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலையும் செய்யப்படுகின்றனர். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடகிழக்கு பகுதிகளில் இவ்வாறான வன்முறைகள் கொலைகள் இடம்பெற்றால் அவர்களுக்கு விசாரணையின் பின்னர் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் மரண தண்டனை விதிக்கப்படும் அம் மரண தண்டனைகள் பொது வெளியில் மக்கள் முன்னிலையில் வழங்கப்படும் இதனால் அக்காலகட்டங்களில் இவ்வாறான பாலியல் வல்லுறவுகள், கொலைகள், கொள்ளைகள் என்பன முற்றாக தடுத்து நிறுத்தப்பட்டு இருந்தது. 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் கூட இவ்வாறான சம்பவங்களுக்கு அங்கு தண்டனை வழங்கப்பட்ட வரலாறுகளும் உண்டு. தற்பொழுது அவ்வாறான தண்டனைகள் இன்மையால் வடகிழக்கு உட்பட பல பகுதிகளில் இவ் போதைப்பொருள் பாவனையும் அதனுடன் தொடர்புபட்ட குற்றங்களும் சர்வசாதாரணமாக இடம்பெற்றுவருகின்றன.




குறிப்பாக போதைப்பொருள்களுடன் கைது செய்யப்படுபவர்கள் சிலர் காவல்துறைக்கு இலஞ்சம் கொடுத்து தப்புகின்றனர். இன்னும் சிலரை பாரிய போதைப்பொருட்களுடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த அர்ப்பணிப்புள்ள காவல்துறையினர் முயற்சிக்கும் பொழுது அவ் போதைப்பொருள் கடத்தலுக்கு பின்னால் அரசியல் புள்ளிகள் அல்லது மிகவும் செல்வாக்குள்ள பணக்கார வர்க்கம் என தடுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. இவ் போதைப்பொருள் பாவனையால் தினம் தினம் பல குடும்பங்கள் தற்கொலை செய்து வருகின்றனர். பல குடும்ப வன்முறைகள் அரங்கேறி வருகின்றன. குறிப்பாக கிராமப்புறவாழ் மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவற்றை கட்டுப்படுத்த அரசு மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதுடன் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும் தண்டனைகள் கடுமையாகும் பட்சத்தில் குற்றங்கள் தடுக்கப்படும் என்றும் நீதியை செயற்படுத்த வேண்டும்.

அத்துடன் கடல்வழி பாதுகாப்பை உச்சகட்ட பலப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும் குறிப்பாக இந்தியாவின் கேரளா கர்னாடக மும்பை பாகிஸ்தானில் கராச்சி மலேசியா மாலைதீவு போன்ற பகுதிகளால் அதிகளவான கஞ்சா அபின் என பலவகைப்பட்ட போதைப்பொருட்கள் வடகிழக்கின் கடற் பிராந்தியங்கள் ஊடாக கடத்தப்படுகின்றன. தற்பொழுது தென்பகுதி கடல் பகுதிகளை விட வடபகுதி கடல் தான் இவ்வாறான போதைப்பொருள் கடத்தலின் மையமாக காணப்படுவதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனர். யுத்த காலங்களில் கடற்புலிகளின் ஆயுதக்கடத்தல்களையும் ஆயுதக்கப்பல்களையும் தாக்கியழித்த மிகவும் வல்லமையுடைய இலங்கை கடற்படையால் வடபகுதிக்கடலால் கொண்டு வரப்படும் போதைப்பொருட்களை ஏன் தடுக்க முடியவில்லை என்ற சந்தேகம் பெரும்பான்மை மக்கள் தொட்டு தமிழ் மக்களிடம் உள்ள மிகப்பெரும் கேள்வியாகும். ஆகவே தேச நலன் கொண்டு போதைப்பொருட்களை தடுக்க முயற்சிக்க ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் கடல்வழி போதைப்பொருட்களை கட்டுப்படுத்த கடற்படையினரை முழுவீச்சில் செயல்படுத்துவதோடு எப்பகுதியால் போதைப்பொருட்கள் கடத்தப்படுதோ அப்பகுதி பாதுகாப்பு கடமைகளில் உள்ள கடற்படையினரை பதவியில் இருந்து விலக்குவதுடன் வடபகுதிகளில் அதிகளவில் கடத்தப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு முழுப்பொறுப்பும் வடபகுதி கடற்படை தளபதியே பொறுப்பேற்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

போதைப்பொருள் விற்பனைகளை தடுக்க தவறும் காவல்துறை அதிகாரிகள் தொடக்கம் மாவட்ட காவல்துறை பொறுப்பதிகாரிகள் வரை அனைவரையும் இடம்மாற்றம் செய்ய வேண்டும். அத்துடன் கிராமங்கள் தொடக்கம் நகரங்கள் வரை தேச நலன் சமுதாய நலன் கொண்டு வாழும் பிரிவினர்களை இனம்கண்டு அவர்களை ஒருங்கிணைத்து காவல்துறையினருக்கு கீழ் அல்லது இராணுவ புலனாய்வினர்க்கு கீழ் மிக இரகசியமான முறையில் செயலாற்ற செய்து கிராமங்களில் நகரங்களில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனையாளர்கள் விற்பனையாளர்கள் முகவர்கள் என அனைவரையும் இனங்கண்டு காவல்துறையினருக்கோ அல்லது இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி இவ்வாறான செயல்பாடுகளை தடுக்க முடியும். இவ்வாறு காவல்துறையினருக்கு தகவல் வழங்கும் செயற்பாட்டாளர்களின் விபரங்களை காவல்துறையினர் வெளிய-ிடாமல் பாதுகாக்க வேண்டும்.

அண்மைக்காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட இளைஞர்களின் விபரங்களை காவல்துறையினர் போதைப்பொருள் முகவர்களுக்கு இனம்காட்டிய சம்பவங்களும் இடம்பெற்றதுடன் போதைப்பொருள் வியாபாரிகளால் இவ்வாறான சமுதாய நலன் கொண்ட இளைஞர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது. ஆகவே அரசுமட்டும் இவ்வாறான போதைப்பொருள் கடத்தல் காரர்களுடன் போராட முடியாது நாட்டில் உள்ள அனைத்து இனங்களும் இவ் விடயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

11ஆம் பக்கம் பார்க்க...

தமிழ் கிறுக்கன்

# "ஒரு நாடு ஒரு சட்டம்" என்றால் இரு முறை ஆயுதக் கிளர்ச்சி

ஜேவிபி யின் அதி முக்கியஸ்த்தர் மொகமட் நிஷ்மியின் நினைவாக, பெரெதெனியாவில் "நிஷ்மி ஹோல்" மரணித்தவர்களின் நினைவாக - பெரதெனியா - ஸ்ரீ ஜெயவர்த்தனபுர - வயம்பவில் நினைவு சின்னங்கள்….யாழ் பல்கலையில் மட்டும் நினைவழிப்பா?


யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இரவோடு இரவாக அழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம்


பேராதெனியா பல்கலைக்கழகத்தில் ஜேவிபியின் நினைவுச் சின்னம்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம்

யாழ் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்காலில் மரணித்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் நினைவாக கட்டி எழுப்பப்பட்ட நினைவுத் தூபி நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது. யுத்தத்தின் கோர நினைவுகளை, அனுபவங்களாக சுமப்பதற்கும், உணர்வுகளை மீட்பதற்குமான உரிமைகளும் மறுக்கப்படுவதனால் சாதிக்கப்போவது என்ன என்ற கேள்விகள் அனைவரையும் துளைத்துக்கொண்டு இருக்கின்றன.

உலகப் போர்கள் நினைவு கொள்ளப்படுகின்றன. நாடுகளின் சுதந்திர விடுதலைப் போராட்டங்கள் நினைவு கூரப்படுகின்றன. விடுதலைப் போர்களிலும், யுத்தங்களிலும் மரணித்தவர்கள் காவு கொள்ளப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் நினைவு கொள்ளப்படுகிறார்கள்.

"80களில்ஜேவிபிகிளர்ச்சிக்காலத்தில்என் சகோதரர் காணாமல் போனார். அவரை தேடி அலைந்த என் அம்மாவின் சோகம் கொடியது. அப்படித்தான் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மாரின் வேதனையும் இருக்கும் என்பதனை நான் அறிவேன். காணாமல் போன உறவுகளை தேடுவதற்கும், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என கேட்பதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது" என J.V.P யின் தலைவர் அனுரகுமார திஸ்ஸ நாயக்க ஒரு முறை கூறியிருந்தார்.

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்றால் இரு முறை ஆயுதக் கிளர்ச்சியை மேற்கொண்ட, தடைக்கு உள்ளாகி இருந்த ஜேவிபிக்கு இருக்கின்ற உரிமைகள் மற்றய சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு இல்லையா? என்ற கேள்விகள் இலங்கையை ஆண்ட, ஆளுகின்ற அரசாங்கங்களை நோக்கி எழுகின்றன.

இங்கு தான் ஒரு முக்கியமானதும், பேசப்படவேண்டியதுமானசிலவிடயங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. ஜேவிபியின் முதலாவது கிளர்ச்சியான 1971லும், 80களின் பிற்பகுதியில் இடம்பெற்ற 2ஆவது கிளர்ச்சியின் போதும், பிரதான பங்கினை வகித்தவர்கள் J.V.P யின் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளில் இருந்தவர்கள்.

குறிப்பாக 1977ல் ஆரம்பிக்கப்பட்டு 1978ல் Inter University Students' Federation ஆக விரிவாக்கிய (IUSF) வில் 70 மாணவர் அமைப்புகள் அங்கம் விகிக்கின்றன. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள் உள்ளிட்ட 15 உயர்கல்வி நிறுவனங்களில் அமைப்புகளை கொண்டிருக்கும் J.V.P யின் மாணவர் அமைப்பே இலங்கையின் மிகப்பெரிய மாணவர் அமைப்பாக விளங்குகின்றது.

1990 ஜனவரியில் தனது 39 ஆவது வயதில் கொல்லப்பட்ட சாந்தா பண்டாரா அல்லது மகாநாம பல்கலைக்கழக மாணவர் கூட்டமைப்பின் (IUSF) முதல் தலைவராகவும், இலங்கையில் மார்க்சிச-லெனினிச அரசியல் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனாவின் முக்கிய தலைவராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

முன்னிலை சோசலிச கட்சியின் தலைவரும், முன்னாள் ஜேவிபியின் மத்திய குழு உறுப்பினரும், பேராதனைப் பல்கலைக்கழக மாணவருமான குமார் குணரட்ணத்தின் அண்ணா ரஞ்சிதம் குணரத்னம் - IUSFன் மற்றுமொரு முன்னாள் தலைவராக இருந்தவர். இவரும் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன். 1985 ஆம் ஆண்டில் பேராதெனிய பகுதியில் நடவடிக்கை குழுவின் தலைவராகவும் இருந்தவர். (Peradeniya AC (Action Committee) தலைவராகவும், ஜேவிபி மத்திய குழு உறுப்பினராகவும், அதன் குருனாகல் மாவட்டத் தலைவராகவும் இருந்தார். இவர் 1989 டிசம்பர் இல் கடத்தப்பட்டு, குருனாகல வெஹெராவில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

1987ல் பேராதெனிய பல்கலைக்களகத்தினதும், பேராதெனிய பகுதியினதும் ஜேவிபியின் IUSF மாணவர் நடவடிக்கைக் குழுவின் தலைவராக 'மோட்டா' 'கமல்' என்ற பெயர்களில் தொழிற்பட்ட பொறியியல் பீட மாணவர், தோழர் மொகமட் நிஷ்மி JVPயின் மத்தியகுழு உறுப்பினராக இருந்தவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தை, ஜேவிபியின் முழுமையான கட்டுக்குள் கொண்டுவந்தவராகவும், மாணவர்களை ஜேவிபி மயப்படுத்தியவராகவும், மாணர்களின் நாயகனாகவும் (Hero) இன்றளவும் நினைவுகூரப்படும் தோழர் மொகமட் நிஷ்மியின் பெயரில் அஹ்பர் ஹோலின் பின்புறமாக உள்ள நிஷ்மி ஹோல் விளங்குகிறது. மாணவர் விடுதியாக விளங்கும் இந்த ஹோல், தோழர் மொகமட் நிஷ்மியின் ஞாபகார்த்தமாக "நிஷ்மி ஹோல்" என அழைக்கப்படுகிறது. ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சிக் காலத்தில், பல்கலைக்கழகம் காலவரையின்றி மூடப்பட்டபோது, ஜேவிபியின் மாணவர் இயக்கம் இலங்கை முழுவதும் வெகுஜன அமைப்புகளுடன் செயல்படுவதற்கான மூளையாக தொழிற்பட்டவர் மொகமட் நிஷ்மி. ஜேவிபியின் மக்கள் அமைப்புகளை அமைத்தல், மக்கள் குழுக்களை ஒழுங்குபடுத்தல், தொழிலாளர் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் மனித உரிமை அமைப்புகளை கட்டியமைத்தல் பணிகளில் ஈடுபட்டவர்.

தோழர் நிஷ்மி, பொலன்னறுவை, அனுராதபுர மாவட்டங்களின் மாணவர் அமைப்புகளுக்கு தலைவராகவும் செயற்பட்டவர். கெகல்லே, ரத்னபுரா, கண்டி, மாதலே, நுவரா எலியா மற்றும் வட மத்திய மாவட்டங்களிலும் பணியாற்றினார். இறுதியாக 1990ல் அவர் கடத்தப்பட்டு கொல்லப்படும் வரை, ஜேவிபியின் அவர் கொழும்பு மாவட்ட முக்கியஸ்த்தராக விளங்கியவர்.

1989 - 90களில் வட மத்திய மாகாணத்தில் இளைஞர்கள் யுவதிகளை கடத்தி சித்திரவதை செய்து கொல்லும் பிரதி காவற்துறைமா அதிபராக இருந்த உடுகம்பொலவிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய, தோழர் மொகமட் நிஷ்மியின் ஞாபகார்த்தமாக பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் மாணவர் விடுதி ஒன்று "நிஷ்மி ஹோல்" என இன்றளவும் அழைக்கப்படுகிறது.

இவ்வாறே பொது வெளியில் அறியப்பட்டவர்களாகவும், போராட்டங்களோடு தொடர்புபட்டவர்களாகவும், பின்னர் இலங்கை அரசியலில் பிரவேசித்த சிலராகவும் விளங்குகின்ற, சுனில் ஹண்டுன்னெட்டி, Ravindra Mudalige, Chameera Koswatta, Duminda Nagamuwa, Udul Premaratne – Sanjeewa Bandara – Najith Indika, Lahiru Weerasekara ஆகியோரும் J.V.Pயின் புரட்சிகர மாணவர் அமைப்பான IUSFன் தலைவர்கள். இந்த IUSFன் தலைவர்களாகவும், செயற்பாட்டாளர்களாகவும், ஆதரவாளர்களாகவும் இருந்து, 80களில், 90களில் கொல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 IUSF தலைவர்கள், 627 பல்கலைக்கழக மாணவர்கள், 5000யிரத்திற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நினைவாக, பேராதனை, வயம்ப, மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தவிரவும் ஜேவிபியின் ISUF பல்கலைக்கழகங்களில் நடாத்தும் கலாசார விழாக்களில், (Kala Ulela venture) தனியாக உருவாக்கப்படும், மாணவர் வீரர்களின் அல்லது மாவீரர்களின் அறை ("Sisu Viru Kutiya") (The Chamber of the Student Heroes). 1987-1990 களில் கொல்லப்பட்ட மாணவர்களின் வரலாறுகள், படங்கள், அவர்களின் தியாகங்கள் குறித்த குறிப்புகள் காட்சிப் படுத்தப்படுகின்றன.


இவையாவும், உயர்கல்வி அமைச்சின், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின், ஜனாதிபதியின், அரசாங்கத்தின், அமைச்சரவையின், பல்கலைக்கழக பேரவைகளின், பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியுடனா மேற்கொள்ளப்படுகின்றன? அனுமதி பெறப்படாவிடின் இவை யாவும் இல்லாது ஒழிக்கப்படுமா? இங்கே ஒருநாடு ஒரு சட்டம் என்பது பின்பற்றப்படுமா?

**குறிப்பு - இந்தப்பதிவின் நோக்கம் ஜேவிபி கிளர்ச்சிகளின் போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள், போராளிகளை அவர்கள் நினைவு கூருவது தவறு என்று சொல்வதற்கானது அல்ல. இலங்கையர்கள் என்ற வகையில், தமது இழப்புகளை நினைவு கொள்வதற்கு, அந்த இழப்புகளுக்கான நினைவுச்சின்னங்களை பேணுவதற்கு அனைவருக்கும் உரிமை என்பதனை உரத்துக் கூறுவதற்கே.**

**நடராஜா குருபரன்**



# பிராந்தியச் செய்திகள்



## நிலாவெளி கடலில் நீராடிய யாழ்.இளைஞர் பலி ஒருவரைக் காணவில்லை

திருகோணமலை நிலாவெளி கடலில் நீராடச் சென்ற யாழ். இளைஞர்களில் இருவர் காணா-மல் போயிருந்த நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சம்பவம் அன்று(2021.03.12) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப்பாணம்-வலிகாமம் தெற்கு பிரதேசத்திலுள்ள குப்பிளான் பகுதியைச் சேர்ந்த நவரஞ்சன் கௌதமன் (வயது-21) ஆவார். மற்றொருவரான சிவச்சந்திரன் ராசா சிந்துஜன் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் நண்பர்கள் சிலர் சென்றனர் எனவும் சமய வழிபாடுகளை முடித்து விட்டு வீட்டுக்குச் செல்வதற்கு முன்னர் நிலாவெளி கடற்கரைப் பகுதிக்கு நீராடச் சென்ற போது இருவர் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் இதில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றவர் காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாகவும், விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

## வெளிநாட்டினருக்கான தனிமைப்படுத்தல் காலம் குறைக்கப்படலாம் - இராணுவ தளபதி

வெளிநாட்டிலிருந்து திரும்பும் இலங்கையர்களின் தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை 7 ஆக குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையினை இராணுவ தளபதி சவேந்திர சில்வா, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விடுத்துள்ளார்.

அத்தோடு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட அவர்களை வீட்டிலேயே தனிமைப்படுத்த அனுமதிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அந்தவகையில்குறித்த இரண்டு கோரிக்கைகளும்எதிர்வரும்நாட்களில்அங்கீகரிக்கப்படும் என நம்புவதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா நம்பிக்கை தெரிவித்தார்.

ஹோட்டல்களில் தனிமைப்படுத்தும் போது வெளிநாட்டில் இருந்துவரும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மினுவாங்கொடை - பேலியகொட கொத்தணியில் மேலும் 236 பேருக்கு கொரோனா

நாட்டில் மேலும் 297 பேர் கொரோனா தொற்றாளர்களாக அன்றைய(2021.03.12) தினம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அதில் 236 பேர் மினுவாங்கொடை - பேலியகொட கொத் தணியில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை - பேலியகொட கொத்தணியில் நெருங் கிய தொடர்பு கொண்டவர்களின் எண்ணிக்கை 82 ஆயிர த்து 935 ஆக உயர்ந்துள்ளது.

55 பேர் சிறைச்சாலை கொத்தணியில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 06 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 87 ஆயிரத்து 286 ஆக உயர்ந் துள்ளது.

தற்போது வைத்தியசாலைகளில் மற்றும் சிகிச்சை மையங்களில் 2 ஆயிரத்து 803 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அன்றைய(2021.3.12) தினம் 397 கொரோனா தொற்றால் குணமடைந் துள்ளனர்.

கொரோனா தொற்றால் குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 958 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா சந்தேகத்தில் 372 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 525 ஆக அதிகரித்துள்ளது.

## யாழில் புதனன்று மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம்

இலங்கையைசர்வதேச குற்றவியல்நீதிமன்றில்நிறுத்தக்கோரிமாபெரும்கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நீதிக்கான போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் கலந்துகொண்டு போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் என வடக்கு-கிழக்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடர் இடம்பெற்றுவரும் இக்காலப்பகுதியில் தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் நடந்தேறிய இனவழிப்புக்கு நீதி கோரி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மத குருக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் அமைப்புகள் இணைந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தை பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 18 ஆம் திகதி அமர்வில் வெளியிடப்படவுள்ள நிலையில் அதற்கான வாக்கெடுப்பு இடம்பெறும் காலப்பகுதியில் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் முகமாக எதிர்வரும் 17ஆம் திகதி இந்த மாபெரும் போராட்டம் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் நல்லூர் சங் கிலியன் பூங்காவில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகிப் பேரணியாக வந்து தற்போது உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுவரும் போராட்டக் களத்தில் நிறைவடையவுள்ளது.

## வடக்கில் 12 பேருக்கு கொரோனா தொற்று: மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்

வடக்கு மாகாணத்தில் மேலும் 12 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் வட்டுக்கோட்டையில் மருத்துவர் உள்ளிட்ட 5 பேர் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 409 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.



அவர்களில் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 பேரும் மன்னார் மாவட்டத்தில் 2 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சங்கானை மருத்துவ அதிகாரி பிரிவில் மருத்துவர் உள்ளிட்ட 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூன்று பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து வீடு திரும்பிய நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் கட்டிடத்தொகுதி பணியாளர் ஒருவருக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் அவரது துணைவிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் வெளிநாட்டு விசாவுக்கு விண்ணப்பித்த மாணவன். மற்றையவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவர்.

மல்லாவி மீன் சந்தையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் இருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இராணுவச்சிப்பாய் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. திருக்கேதீஸ்வரம் ஆலய மகா சிவராத்திரி திருவிழாவுக்கு கடை அமைத்தவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மன்னார் வீதி சீரமைப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர் ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.




## ரோஜா சீரியலில் இருந்து திடீரென விலகிய பிரபலம்




சன் தொலைக்காட்சியில் ஏகப்பட்ட சீரியல்கள் ஒளிபரப்பாகின்றன. அதில் ஹிட்டாக ஓடிக் கொண்டிருக்கிறது ரோஜா.

TRPயில் முதல் இடத்தில் இருந்துவந்த இந்த சீரியல் இப்போது 2ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. கடந்த 3,4 வாரங்களாக பாரதி கண்ணம்மா சீரியல் தான் முதல் இடத்தை பிடித்து வருகிறது.

தற்போது ரோஜா சீரியல் ரசிகர்களுக்கு ஒரு அதிர்ச்சி தகவல் வந்துள்ளது. அதாவது இந்த சீரியலின் கதையாசிரியராக இருந்துவந்த எழுத்தாளம் பத்மாவதி இதில் இருந்து விலகிவிட்டாராம்.

அவருக்கு பதிலாக இனி குரு சம்பத் குமார் என்பவர் தான் இனி கதை எழுத இருக்கிறாராம். இந்த தகவல் ரோஜா சீரியல் ரசிகர்களுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாக தான் உள்ளது.

## சிவகார்த்திகேயனின் டாக்டர் ரிலீஸ் திகதி வெளியானது அதிகாரப்பூர்வ அறிவிப்பு





நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் டாக்டர். இப்படத்திலிருந்து இதுவரை 3 பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

சமீபத்தில் தமிழக தேர்தல் காரணமாக டாக்டர் திரைப்படத்தின் ரிலீஸ் மார்ச் 26 இல்லை, என தயாரிப்பாளர் நிறுவனத்திடம் இருந்து வெளியானது. இந்நிலையில் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள டாக்டர் திரைப்படம் வரும் மே மாதம் ரம்ஜான் பண்டிகைக்கு வெளியாகவுள்ளது என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் திரையரங்கிற்கு வரும் நடிகர் சிம்புவின் சர்ச்சை திரைப்படம்..!

நடிகர் சிம்பு தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர். இவருக்கு தமிழகம் முழுவதிலும் அதிகப்படியான ரசிகர்கள் காணப்படுகின்றனர். மேலும் நீண்ட நாட்களாக இவரின் திரைப்படங்கள் வெளியாகாமல் இருந்த நிலையில் தற்போது இவர் மீண்டும் தனது திரைப்படங்களில் தொடர்ந்து பிஸியாக நடித்து வருகிறார். அந்த வகையில் இவர் தற்போது வெங்கட் பிரபுவின் மாநாடு திரைப்படத்தில் நடித்து வருகிறார். அதனை தொடர்ந்து இவர் பத்து தல, நதிகளிலே நீராடும் சூரியன் என இரண்டு திரைப்படங்களில் நடிக்கவுள்ளார்.

இந்நிலையில் கடந்த 2004-ல் இவர் நடித்து இயக்கிய மன்மதன் திரைப்படம் மிகவும் சர்ச்சையாக பேசப்பட்டாலும், அப்போது பிளாக் பஸ்டர் ஹிட்டானது. மேலும் தற்போது முன்னணி நடிகர்களின் திரைப்படங்கள் மீண்டும் வெளியாகி வரும் நிலையில், சிம்புவின் மன்மதன் திரைப்படம் வரும் மார்ச் 19 ஆம் திகதி மீண்டும் திரையரங்கில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## சமந்தாவின் நடிப்பால் கடுப்பாகி கத்திய நடிகை நயன்தாரா – படப்பிடிப்பில் நடந்த ஷாக்கிங் சம்பவம்

தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகைகளாக விளங்கி வருபவர்கள் நடிகை நயன்தாரா மற்றும் நடிகை சமந்தா.

இவர்கள் இருவரும் இணைந்து தற்போது காத்து வாக்குல ரெண்டு காதல் படத்தில் கதாநாயகிகளாக நடித்து வருகின்றனர்.

இந்நிலையில் சமீபத்தில் நயன்தாரா மற்றும் சமந்தா இணைந்து நடிக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறதாம்.

இதில் சூப்பராக நடித்து அசத்திய சமந்தாவின் காட்சியை பார்த்து, சுற்றி இருந்த கூட்டம் கைதட்டி கரகோஷத்தை எழுப்பியுள்ளனர்.

இதனை பார்த்த நடிகை நயன்தாரா, உடனடியாக கடுப்பாகி சைலென்ஸ் என கத்தியுள்ளாராம்.

தனது காதலன் விக்னேஷ் சிவன் படம் என்றதால் நடிகை நயன்தாரா இப்படி செய்துருக்கிறார் என பத்திரிகையாளர் ஒருவர் கூறியுள்ளார்.



## திருமண ஏற்பாடுகள் தீவிரம்.... களைகட்டும் நடிகை ஹன்சிகாவின் வீடு

குறுகிய காலத்திலேயே விஜய், சூர்யா, சிம்பு, தனுஷ் போன்ற பிரபலங்களுக்கு ஜோடியாக நடித்து தமிழ் திரையுலகில் முன்னணி ஹீரோயினாக வலம் வந்தவர் ஹன்சிகா.

தனுஷின் மாப்பிள்ளை படம் மூலம் ஹீரோயினாக அறிமுகமானவர் ஹன்சிகா. இதையடுத்து குறுகிய காலத்திலேயே விஜய், சூர்யா, சிம்பு போன்ற பிரபலங்களுக்கு ஜோடியாக நடித்து தமிழ் திரையுலகில் முன்னணி ஹீரோயினாக வலம் வந்தார். தற்போது இவரின் 50-வது படமான 'மஹா' ரிலீசுக்கு தயாராகி வருகிறது. நடிகை ஹன்சிகா தமிழ் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி போன்ற பிற மொழி படங்களிலும் நடித்துள்ளார்.

இந்நிலையில் நடிகை ஹன்சிகா வீட்டில் திருமண ஏற்பாடுகள் களைகட்டி வருகிறதாம். ஹன்சிகாவின் அண்ணன் பிரசாந்த் மோத்வானிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. அதன்படி, வருகிற மார்ச் 20-ந் திகதி, ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் அவருக்கு திருமணம் நடைபெற இருக்கிறது. இதற்காக அங்குள்ள அரண்மனையை வாடகைக்கு எடுத்து இருக்கிறார்களாம். அங்கு திருமண நிகழ்ச்சிகள் 2 நாட்கள் நடைபெற உள்ளதாம்.



தொகுப்பு :- ஹாசினி




# இயற்கையான முறையில் பளபளக்கும் சருமம் பெற குறிப்புகள்

இரசாயனங்கள் என்றும் உங்களுக்கு நிரந்திரமான தீர்வை தரவல்லது அல்ல. தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்ற இலாப நோக்குடன் தான் அழகு சாதன பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மற்றும் இதில் சிலவன பக்கவிளைவுகள் தரக்கூடியதும் கூட. எனவே, இயற்கையான முறையை பின்பற்றுவது தான் சரியான தீர்வை அளிக்கும்.



**கரட் மற்றும் பால்**

கரட்டை நன்றாக அரைத்து பாலில் கலந்து மேனியில் தடவி 10 நிமிடம் கழித்து குளித்து வந்தால் மேனி பளபளப்பாகும்.

**கரட், ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை**

சம அளவு கரட் சாறு, ஆரஞ்சு பழச்சாறு, எலுமிச்சை பழச்சாறு மற்றும் பன்னீர் ஆகியவற்றை எடுத்து அதனுடன் தயிர் சேர்த்து நன்றாக கலந்து முகம் மற்றும் கழுத்தில் பூசி சிறிது நேரம் ஊற வைத்து பிறகு கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்

**எலுமிச்சை சாறு**

எலுமிச்சை பழத்தை இரண்டாக நறுக்கி இரவு படுக்கச் செல்லும் முன் முகப்பரு உள்ள இடத்தில் தடவி சிறிது நேரம் கழித்து குளிர்ந்த தண்ணீர் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால் முகப்பரு குறையும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் செய்து வந்தால் முகப்பரு குறையும்.

**பால் மற்றும் கடற்சங்கு**

கடற்சங்கை எடுத்து நன்கு சுத்தம் செய்து அதை பசும்பால் விட்டு அரைத்து பருக்கள் மீது பூசி வந்தால் இரண்டே நாட்களில் பருக்கள் குறையும்.

**புதினா மற்றும் தேன்**

புதினா இலைகளை அரைத்துச் சிறிதளவு தேன், எலுமிச்சை சாறு சேர்த்துக் குழைத்து முகத்தில் பூசி வந்தால் கரும்புள்ளிகள் மறைந்து விடும்.

**பப்பாளிப்பழம்**

பப்பாளிப் பழத்தை நன்கு பிசைந்து முகம், கழுத்து, கைகளில் பூசி 30 நிமிடங்கள் கழித்து முகம் கழுவ முகப்பொலிவு அதிகரிக்கும்.

**எலுமிச்சை சாறு ஆவி**

எலுமிச்சை சாறு பிழிந்த நீரில் ஆவி பிடித்தல், முகத்தில் இருக்கும் மாசினை அகற்றி பளபளப்பாக்க உதவும்.

# மலச்சிக்கலை பிரச்சனைக்கு தீர்வு தரும் வல்லாரை கீரை பொரியல்

நீரிழிவு நோயாளிகள் வல்லாரைக் கீரை உண்பது நல்லது. இக்கீரை மலச்சிக்கலைப் போக்கி, வயிற்றுப் புண், குடல்புண்ணை ஆற்றுகிறது. ரத்த சோகையைப் போக்கி ரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

மலச்சிக்கலை பிரச்சனைக்கு தீர்வு தரும் வல்லாரை கீரை பொரியல்

**தேவையான பொருட்கள்:-**

**வல்லாரை கீரை – 1 கப்**
**வெங்காயம் – 1**
**பச்சை மிளகாய் – 3**
**பூண்டு – 5 பல்**
**பெருங்காய தூள் – 1/2 டீஸ்பூன்**
**தேங்காய் துருவல் – தேவையான அளவு**
**உப்பு – சிறிதளவு**
**எண்ணெய் – 1 மேஜை கரண்டி**




**தாளிக்க – கடுகு, சீரகம், கறிவேப்பிலை**

**செய்முறை:-**

வெங்காயம், ப.மிளகாய், பூண்டை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

கீரையை நன்றாக சுத்தம் செய்து பொடியாக நறுக்கி கொள்ளவும்.

கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, சீரகம், கறிவேப்பிலை, பெருங்காயத்தூள் போட்டு தாளித்து பிறகு வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு சேர்த்து வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் நறுக்கிய கீரையை சேர்த்து வதக்கிய பின்பு உப்பு, சிறிதளவு தண்ணீர் தெளித்து மூடி வேக வைக்கவும்.

கீரை வெந்ததும் தேங்காய் துருவல் சேர்த்து கிளறி இறக்கவும்.

சத்தான வல்லாரை கீரை பொரியல் ரெடி.



தோற்றத்தை வைத்து
யாரையும் ...
வேண்டாம் என
ஒதுக்காதீர்கள்...
ஒருவேளை
அவருக்கு சேர வேண்டிய
மொத்த அழகையும்....
கடவுள்
அவர் இதயத்தில்
வைத்திருக்கலாம்.....

உன் நினைவுகளை
சுமந்த இதயம்
இன்னும் கூட
துடித்துக்கொண்டு
தான் இருக்கிறது
உன் வருகைக்காக...



# யார் மதவாதிகள்? - சிவசேனா தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்

கடந்தவார தொடர்ச்சி...


**கேள்வி :-** அண்மையில் கூட சிங்கள பேரினவாதிகள் ஒருசிலரினால் குறுந்தூர் மலையில் பிரச்சனை, கின்னியாவில் பிரச்சனை, கிழக்கிலே பிரச்சனை இவ்வாறெல்லாம் அந்த இடங்களிலே மலைகளும் குன்றுகளும் அரச மரங்களும் இருக்கின்ற இடங்களிலே அவர்கள் பிரச்சனைகளை போடுகின்றார்கள். அங்கு சிவன் கோவிலை கட்டக்கூடாது அங்கு சிவன் கோவில் இருக்கவில்லை இவ்வாறெல்லாம் கூறினார்கள். குறுந்தூர் மலை விவகாரத்திலே எனக்கு அறிவுக்கு எட்டிய வரையிலே 1996 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு காலகட்டத்திலே குறுந்தூர் மலைக்கு சென்றிருந்தோம். அந்த இடத்திலே சிறிய கோவில் ஒன்று இருந்தது சிறிய சிறிய கட்டடங்களும் இருந்தன. அதிலே சூழங்களும் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் நான் கடைசியாக சமாதான ஒப்பந்தத்தின் போதும் வந்து பார்த்தேன் அதே சூலம் இருந்தது அதற்கு பின்னர் தற்பொழுது நடந்த பிரச்சனையின் பொழுது பார்க்கும் பொழுது உண்மையில் வால்பிலேட்டால் அறுத்து அந்த சூலம் எரியப்பட்டிருந்தது. நீங்கள் நேர்காணல் ஒன்றிலே அங்கு சூலம் அறுக்கப்படவில்லை என்று கூறிய விடயத்தில் பல அரசியல்வாதிகள் உங்களுக்கு எதிரான போர் கொடியை தூக்கினார்கள் உண்மையில் அங்கு நடந்தது தான் என்ன, நீங்கள் ஏன் ஊடகங்களுக்கு அவ்வாறு கூறினீர்கள்?

**பதில் :** குறுந்தூர் மலை சுபாசுக்கு தெரியுமோ, ரவிகரனுக்கு தெரியுமோ தெரியாது குறுந்தூர் மரம் என்றாலே அது சிவனுக்கு உரிய மரம். மாணிக்கவாசகரை ஆட்கொள்வதற்கு சிவபெருமான் குறுந்தூர் மர நிழலிலே ஆட்கொண்டார். சிவபெருமான் சார்ந்த இந்த குறுந்தூர் குன்றிலுள்ள கோவில்கள் சிவன் கோவில்கள் என்பதும் அங்கு சைவர்கள் தான் வழிபட்டார்கள் என்பது உண்மை. ஆனால் நான் எதை எடுத்து சொன்னேன். மதங்களுக்கு இடையில் தேவையில்லாமல் பொய்யின் அடிப்படையில் சிக்கல்கள் ஏற்படக்கூடாது. பொய் பேசக்கூடாது. நாங்கள் மதத்தில் இருக்கும் உண்மையை பேச வேண்டும்.

நான் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி குறுந்தூர் மலை உச்சி வரை போய் இருந்தேன். அங்கே நீங்கள் கூறியதைப்போன்று அறுவாலால் வெட்டப்பட்டு சூலம் இல்லாமல் இருந்தது. நான் அதை படமும் எடுத்துக்கொண்டு வந்திருந்தேன். அதன் பின்னர் அங்குள்ள மக்கள் புதியதொரு சூலத்தை வைப்பதற்கு தயார் நிலை கொண்டதையும் நான் பார்த்துவந்தேன். அதை அவர்கள் கொண்டு வைத்தும் இருக்கிறார்கள். வைத்த மறுநாளே அந்த சூலம் காணாமல் போய்விட்டதாக எனக்கு தகவல் வந்தது. அங்கு சென்று படையலிட்டு வந்ததை எல்லாம் குறுந்தூர் மலைக்கு சென்று வந்ததன் பின்னர் அங்குள்ளவர்களுடன் நான் தொடர்பு வைத்திருந்தேன். எனது விருப்பம் ஒவ்வொரு வாரமும் நாங்கள் அங்கு போக வேண்டும் யாத்திரையாக போக வேண்டும் வழிபாட்டிற்கு போக வேண்டும் குறுந்தூர் மலையிலுள்ள சிவனை வழிபட வேண்டும் அருமையான சூழல் அது. அந்த நோக்கத்தில் நான் எழுதினேன் எல்லோருக்கும் அப்படி அப்படி செய்யுங்கள் என்று எல்லாம் கூறினேன். நீங்கள் கூறிய மாதிரி அறுவாலால் எப்போது வெட்டப்பட்டது செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி 2020 ஆம் ஆண்டு. அமைச்சர் தலைமையில் எப்பொழுது போனார்கள். 18 ஆம் திகதி ஜனவரி மாதம் 2021 இல் போனார்கள். இது இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இரண்டு முறையோ ஒரு முறையோ அங்கு வைத்து படையல் எல்லாம் செய்தும் அந்த சூலத்தை காணவில்லை. அமைச்சு போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 4 பேர் அங்கு சென்றார்கள். அவர்கள் இன்று வரை அங்கு சூலம் இருந்ததாக வாய் திறந்து ஒரு பதில் சொல்லவில்லை. அவர்களும் போய் பார்த்துவிட்டு தானே வந்திருக்கிறார்கள்.

கஜேந்திரகுமார் போயிருக்கிறார். கஜேந்திரன் போயிருக்கிறார். செல்வம் அடைக்கலநாதன் போயிருக்கிறார் வினோதலிங்கம் போயிருக்கிறார். நான் பார்த்ததை போன்று அவர்களும் பார்த்திருக்கிறார்கள். 18 ஆம் திகதி தமிழ்நாட்டில் செய்திவந்தது இங்கு வந்த செய்தியை நான் அக்கறை கொள்ளவில்லை. இந்த செய்தியிலுள்ள நம்பகத்தன்மையை நான் கேள்விக்குறியதாக தான் பார்ப்பேன். சில செய்திகள் நம்பகத்தன்மை குறைவாகத்தான் காணப்படும். தமிழ் நாட்டிலே அந்த செய்தி வந்ததும் என்ன செய்தி வந்தது என்றால், மூன்று செய்தி சூலத்தை அகற்றினார்கள், கோவிலை உடைத்தார்கள், இருந்த இடத்திலே புத்தரை வைத்து புத்த விகாரை கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள் இவை அங்கு வந்த செய்திகள்.

தமிழ் நாட்டிலிருந்து ஒரு அழைப்பு வந்தது ஐயா ஒரு சைவக்கோவிலை உடைப்பதை நீங்கள் பார்த்துக்கொண்டு இருந்தீர்களா? 18 ஆம் திகதி இது நடந்ததாக தான் 19 ஆம் திகதி செய்தி வந்தது. அதையடுத்து ஒரு திரைப்பட இயக்குனர் ஒரு காணொளி பதிவு செய்கிறார். அதிலே சொல்கின்றார் சூலத்தை உடைத்தார்கள், வைரவ சிலையை உடைத்தார்கள், அழகான கோவில் ஒன்றை தரைமட்டமாக்கினார்கள், அந்த கோவில் இருந்த இடத்திலே புத்த விகாரை கட்டினார்கள், அங்கே புத்தர் சிலையை வைத்தார்கள் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி நடந்ததாக அவர் பேட்டி கொடுக்கிறார். அவர் காணொளியை வெளியிட்டிருக்கிறார். இது எவ்வளவு தவறான செய்திகள். இதில் என்ன நடக்கப்போகிறது. ஊலகெங்கும் 120 கோடி இந்துக்கள் வாழுகின்றார்கள். அவர்கள் தமிழர்களாக மட்டும் இருக்கிறார்கள். அனைவருக்கும் இந்த செய்தி ஆங்கிலத்தில் போகின்றது ஹிந்தியில் போகிறது டெல்லியில் இருந்து என்னை அழைத்து கேட்கிறார்கள் என்ன இது உண்மையா எத்தனை கோவில்கள் உடைக்கப்பட்டது என்றெல்லாம். கோவிலே அங்கு இருக்கவில்லை உடைப்பதற்கு. கோவிலை நீங்கள் எப்பொழுதாவது பார்த்திருக்கிறீர்களா பழைய இடிபாடுகள் அங்கு இருக்கிறது 4 கருங்கல் தூண்கள் இருக்கின்றன நிலத்திலே உடைந்த சந்திரவட்டக்கல் இருக்கிறது. அதை சுற்றியொரு அரைவட்டத்திலே ஒரு கருவறைக்கான கட்டடம் இருக்கிறது. எதிர்ப்பக்கத்திலே ஆழமான குழிகளை தோண்டியிருக்கிறார்கள் கீழே நல்ல அழகான கிணறு இருக்கிறது புதையலைத்தேடி கீழே அழகான பல இடங்கள் இருக்கிறது அந்த கோவில் இருந்ததற்கான அல்லது ஒரு கூரையுள்ள கட்டடம் அங்கே இருந்ததற்கான சாட்சி ஒன்று கூட அங்கு இல்லை. கீழே மாத்திரம் நூறு ஆண்டுகளுக்குள்ளே யாரோ ஒருவர் ஒரு கட்டடத்தை கட்டி அதற்கும் கூரையில்லை. சுவர்கள் தான் இருந்திருக்கிறது. இது நூறாண்டுகளுக்குள் கட்டப்பட்ட ஒரு கட்டடம். அதுவும் கீழே மேலே அல்ல. உச்சியில் கோவில் இருக்கவில்லை. இருக்காத கோவிலை எவ்வாறு உடைத்ததாக சொல்ல முடியும்? ரவிகரன் பார்த்தாரா? குமார் பொன்னம்பலத்தினுடைய மகன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பார்த்தாரா? கஜேந்திரன் பார்த்தாரா? செல்வம் அடைக்கலநாதன் பார்த்தாரா? வினோதலிங்கம் பார்த்தாரா? கோவில் இருந்த கூரையை பார்த்தார்களா? உடைப்பதற்கு. களஞ்சியம் திரைப்பட இயக்குனர் கலைஞர் சொல்கின்றார் கோவிலை உடைத்தார்கள் என்று. கோவிலை இடித்தார்கள் என்ற செய்தி வருகிறது. யார் கோவிலை இடித்திருக்கிறார்கள்.



நான் எப்படி பொய் சொல்ல முடியும்? சைவசமயத்தில் இருந்துகொண்டே என்னை பொய் சொல்ல சொல்கின்றீர்களா? சூலம் அறுக்கப்பட்டது எப்போது? 21 ஆம் திகதி செப்டம்பர் மாதம் 2020 ஆம் ஆண்டு போகும் போதே சூலம் அறுக்கப்பட்டிருந்தது. அது 18 ஆம் திகதி அறுக்கப்பட்டதா? அதைத்தான் நான் கூறுகின்றேன். சூலம் அறுக்கப்படவில்லை, கோவில் இடிக்கப்படவில்லை, அங்கே புத்த விகாரை கட்டப்படவில்லை. 18 ஆம் திகதி நடந்த நிகழ்ச்சியை தான் நான் கூறுகின்றேன். அதற்கு முன்னர் போன நாடாளுமன்ற உறுப்பினர்கள் சூலத்தை பார்த்தார்களா? ரவிகரன் பார்த்தாரா? நான் கூறுவதைப்போல் அன்று அந்த சூலத்தை அறுக்கவில்லை.

**தொடரும்...**
**நேர்காணல் :- இரணியன்**

04ஆம் பக்க தொடர்ச்சி...

ஆகவே இனியும் காலம் தாழ்த்தாமல் அரசியல் பழி உணர்ச்சிகளை கைவிட்டு சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதை விட்டு ஒரேநாடு ஒரேசட்டம் என்ற கொள்கையை தனியே சிங்கள மக்களுக்கு மட்டுமல்லாது தமிழர்கள் முஸ்லிம்கள் என அனைவருக்கும் பாகுபாடு இன்றி செயற்படுத்துவதுடன் தமிழர்களுக்கான குறைந்தபட்ச தீர்வையாவது வழுங்க முன்வருவதுடன் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடயத்தில் அக்கறை கொண்டு அவர்களில் சிலரையாவது விடுதலை செய்வதுடன் தமிழர்களின் கலாச்சார சமய விழுமியங்களை மதித்து செயல்பட்டு இனங்களுக்கிடையேயான இன முறுகல்களை நீக்கி அவர்களின் மனித உரிமைகளை பேணி செயற்படுவதுடன் அபிவிருத்தியின் பாதையில் மிக வேகமாக செல்ல உதவியாக இருக்கும் இதனை விட்டு அடக்கு முறைகளையும் இனவன்மத்தையும் தொடர்ச்சியாக செயல்படுத்தினால் உலக அரங்கில் தனிமைப்படுத்தும் நிலைக்கு தள்ளப்படுவதுடன் பொருளதார அபிவிருத்தி ரீதியாக மிக மோசமான பின்னடைவுகளை சந்திப்பதுடன் தனிய தமிழினம் மட்டுமன்றி சிங்கள மக்களும் இதற்கு முகம்கொடுக்க நேரிடும் மாறிவரும் உலக நியமாங்களுக்கு அமைய தனித்துவமான ஆட்சியை நடாத்தி அனைத்து அன மக்களும் ஒற்றுமையுடனும் சமத்துவத்துடனும் தங்கள் தங்கள் கலாச்சார மத விடயங்களில் மேம்படவும் நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்கு விளக்கேற்றி செயலாற்ற வேண்டும் என ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களும் அழைத்து நிற்கின்றனர்.

06ஆம் பக்க தொடர்ச்சி...

குறிப்பாக வடகிழக்கு மக்கள் இவ் அழிவுகளும் இளம் சமுதாயத்தை அழிக்கும் இப் போதைப்பொருள் விற்பனையாளர்கள் முகவர்களிடம் இருந்து தமது பிள்ளைகளைகாக்க உறுதிபூணுவதுடன் சமுதாய நலன் செயற்பாட்டாளர்கள் கல்விமான்கள் சமய தலைவர்கள் பல்கலைக்கழக சமூகம் என அனைவரும் இதற்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்பதுடன் அரசாங்கமும் போதையில்லா இளம் சமுதாயத்தை கட்டியெழுப்புவதன் ஊடாகவே நாட்டின் எதிர்காலம் வளர்ச்சி பெறும் என்பதுடன் அதற்கு ஏதுவாக சகல முப்படைகளையும் இதற்கு களமிறக்கி உத்வேகத்துடன் செயற்பட்டு முற்றாக போதைப்பொருட்களை ஒழிக்க முன்வர வேண்டும் என்பதுடன் பாதாள உலக குழுக்களை அடக்கியது போல் இதனையும் அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதுடன் இதனை வைத்து அரசியல் செய்யும் சில அரசியல்வாதிகளை இனங்கண்டு அப்பறப்படுத்துவதுடன் மறுபக்கம் போதைக்கான வியாபார வரியை செலுத்தி அரசை குளிர வைத்துக்கொண்டு மறுபக்கம் போதைப்பொருட்களை கடத்தும் கைங்காரியத்தை செய்யும் பெரும் முன்னனி நிறுவன தலைமைகளை இனங்கண்டு தடுப்பதுடன் அவர்களது வியாபார உரிமங்களை ரத்து செய்ய வேண்டும் என்பதுடன் ஒட்டுமொத்த இலங்கை நாட்டின் சுபீட்சத்துக்கு அபிவிருத்திக்கும் வினைத்திறனாக செயற்பாட்டுக்கும் முதுகெலும்பாக இருக்கப்போகும் எமது இளம் சந்ததியினரை காப்பாற்ற ஒன்றுபடுவோமாக என அழைத்து நிற்கும் ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்கள்.

# சித்தார்த்தனும் – அரசடிப்பிள்ளையாரும்



பெரிதாக நான் இரவில் வெளியில் வருவதே இல்லை அது இருள் மீது கொண்ட அச்சமோ பேய்கள் மீதான பயமோ என்று கேட்டுவிடாதீர்கள். உண்மைய சொல்லும் அரிச்சந்திரன் இல்லையே நான் இங்கு நான் பேய்கள் என்பது உண்மையான பேய்களைத்தான் பச்சை உடுத்திய அன்னியர்களையல்ல நினைவில் கொள்க அரிச்சந்திரனல்ல ...

ஆனாலும் அன்று காலை கின்னியாவில் நடந்த நில ஆக்கிரமிப்பு போராட்டம் ஒன்றிற்காய் சென்றுவிட்டு வீடு திரும்ப முன்னதாய் இருள் மெல்லச் சூழத் துவங்கியிருக்கவே முற்றுமாய் இருட்ட முதல் வீடு செல்லும் நோக்குடன் வேகமாக சென்று கெண்டிருந்தேன்...

எங்கள் வீட்டு முச்சந்தியை அடைந்த போழுது யாரோ இருவர் தமக்குள்ளாய் கதைத்துக்கொண்டிருப்பது என் காதுகளில் கேட்கத்துவங்கியது.

ஆம் அந்த குரல் எங்கள் வீட்டருகில் இருந்த அரசடிப்பிள்ளையார் கோயிலின் பின்புறமாக இருந்தே வந்தது. அந்த குரல்களில் ஒரு நார்ப்பு இருக்கவே எனக்கு பயம் தொற்றிக்கொண்டது ஆனாலும் இளங்கன்று எல்லாவா யார் இந்த நேரத்தில் இங்கு என்ன கதைக்கிறார்கள் என்று காதுகளை தீட்டி அந்த குரலின் கதையை செவிமெடுக்க ஆரம்பித்தேன் ஒட்டுக்கேட்பது தவறுதான் எனக்கும் தெரியும் ஆனாலும் கேட்டு விட்டேனே ...

'அந்த குரல்களின் உரையாடல் இவ்வாறாக அமைந்தது'

சித்தார்த்தா நான் விரும்பி இழைப்பாற இருக்கிறதோ இந்த அரசடியும் குழக்கடிகளும்தான் இப்ப என்னடா என்டா உன்ட ஆக்கள் என்ன அங்கையும் இருக்க விடுறானுகள் இல்ல நான் எங்கதான் போறது நீயே சொல்லு என்றவாறு அந்த குரல் அமைய

நீண்ட அமைதிக்கு பின்னர் ...

ஆம் எனக்கும் புரிகிறது என்ன செய்வேன் நீயே சொல்லு முற்றும் திறந்து இறுதியில் பரிநிர்வாண நிலையடைந்த என் பெயரை சொல்லியே நில ஆக்கிரமிப்புக்கள், கடத்தல்கள், கொலைகள், இன அழிப்புக்கள் எங்க போய் நான் அழ ...

இப்படியாய் அந்த உரையாடல் நீண்டது எனக்கு யார் இவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்று ஒன்றுமாய் விளங்காததால் யாரது யாரும் இருக்கிறீங்களா என பயத்துடனே கேட்டேன்

பதில் இல்லை நீண்ட அமைதி...

மீண்டும் யாராவது இருந்தா வெளியில வாங்கோ என்றவாறு தைரியத்தை வரவச்சு உரத்த குரலில் கேட்டும் எந்த பதிலும் வரவில்லை

சிறுவினாடி மயான அமைதியன் பின்னராக காற்று பலமாய் வீசத்துவங்கவே என் உடல் ரோமங்கள் பயத்தில்சிலிர்துக்கொண்டதுகந்தசஷ்டி கவசத்தை

"காக்க காக்க கனகவேல் காக்க நோக்க நோக்க நொடியில் நோக்க தாக்க தாக்கத் தடையறத் தாக்க பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட பில்லி சூனியம் பெரும்பகை அகலவல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள் அல்லல் படுத்தும் அடங்கா முனியும் பிள்ளைகள் தின்னும் புறக்கடை முனியும் கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும் பெண்களைத் தொடரும்பிரம்மராட்சதரும் அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட"

வாயில் முணுமுணுத்த படியே வீட்டை வந்தடைந்தேன்... எதுவா இருந்தாலும் விழுஞ்சதும் பார்ப்பம் என்றவாறு நெற்றி முழுவதும் பட்டை அடித்துவிட்டு படுத்து உறங்கிவிட்டேன்...

காலையில் பக்கத்து வீட்டு மணியண்ணை விழுந்தடிச்சு வீட்ட வந்தார் அவர்தான் அந்த அரசடி பிள்ளையார் பூசாரி

டேய் தம்பி கதை தெரியுமோ எங்கட பிள்ளையார் கோவில் இருந்த இடத்த எதோ 6ம் நூற்றாண்டுல விகார இருந்ததாம் என்டு தொல்லியல் திணைக்களக்காரர் வந்து நிக்கிறாங்கள்ட உள்ளையும் போக விடானுகளாம் ஆமி வேற துணைக்கு நிக்கிறான் பிள்ளையார் இருந்த இடத்த இப்ப ஒரு புத்தர் சிலைய வச்சிருக்கானுகள் ...

சனம் போராடிட்டு நிக்குது நீயும் ஒருக்கா வந்து என்ன என்டு பார் என்ற மணியண்ணை அடுத்த வீட்டு படலையை தட்டினார் ...

எனக்கே இரவு நான் கேட்ட குரல்கள் ஒரு தெளிவற்று மனதில் ஓடிக்கொண்டே இருக்க ஆக்கிரமிப்புபுத்தனே வெளியேறு என்னும் கோசத்துடன் பிள்ளையார் கோயில் வளவை முற்றிகையிட்டோம்...

**புவனேஸ்வரன் தர்சிகன்**

## சிறந்த அறிவுரை வரிகள் ; தமிழ் தத்துவங்கள்

வெறும் பெருமைக்காக எதையுமே செய்யாதே உன் மனநிறைவுக்காக உனக்கு பிடித்ததை பெருமையோடு செய்

பூத்து குலுங்கினாலே பறித்து விடுவார்கள் என்று மலர் ஒரு நாளும் பூக்காமல் இருந்தது இல்லை மனிதர்கள் நாம் தான் இங்கு பலபேருக்காக பல நேரங்களில் பச்சோந்தி வேஷம் போட்டு கொண்டு இருக்கிறோம்

வாழ்க்கை தேடல்களுக்கான சிறந்த விடை உன் அனுபவங்களால் மட்டுமே உனக்கு கிடைக்க பெறும் ஆதலால் எதையும் நேருக்கு நேராக சந்தித்து விட்டு வெற்றி பெற்றால் ஜெயமாகட்டும் தோல்வியுற்றால் ஒரு சிறந்த அனுபவமாய் அமையட்டும்

நேரம் வரட்டும் செய்யலாம் என்று காத்திருப்பதும் காலம் வந்தால் எல்லாம் தன்னாலே கிடைக்கப்பெறும் என்ற மூட நம்பிக்கையோடு கனவு காண்பதும் ஒருபோதுமே உன் வாழ்க்கைக்கு உகந்தது அல்ல

அதிஷ்டம் கூட சில சமயம் கிடைக்கும் என்று நினைப்பவன் கையிலே சென்றடையும் எனவே எதை செய்தாலும் அதன் மீது பற்றாக இரு... துணிந்து நிமிர்ந்து போராடு

ஒருவரை கண்டு நன்றாக வாழ்ந்தால் அவர்கள் போல் தான் வாழ வேண்டும் என்று தானே நினைகிறார்கள் தவிர எவரும் அவர்களை போலவே நாமும் சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுவது இல்லை.

வாழ்க்கை என்பது எப்போதும் உறவுகளிடம் பூ போல அழகானதாக அமைந்து விட்டால் சண்டை, சச்சரவுகள் எல்லாம் பனி போல விலகி விடும்

நீ ஒருவருக்கு ஆயிரம் விதத்தில் உதவியிருக்கலாம் ஆனால் ஒரு முறை அவர் உன்னிடம் குறை கண்டிருப்பின் அந்த கணத்தில் நீ செய்த உதவிகள் அனைத்தையும் மறந்து போவார்கள் இது தான் உலகம்




## ஆப்பிள் நிறுவனம் வெளியிட்ட புது தகவல்

ஆப்பிள் நிறுவனம் தனது ஐபோன் 12 உற்பத்தி குறித்து தகவலை அறிக்கையின் மூலம் தெரிவித்து உள்ளது.

இந்தியாவில் ஐபோன் 12 உற்பத்தி துவங்கி இருப்பதாக ஆப்பிள் நிறுவனம் அறிவித்து இருக்கிறது. சில தினங்களுக்கு முன் விரைவில் இந்தியாவில் ஐபோன் 12 உற்பத்தி துவங்கும் என தகவல் வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்காக ஐபோன் 12 உற்பத்தியை இந்தியாவில் துவங்குவதில் பெருமை கொள்கிறோம் என ஆப்பிள் வெளியிட்டு இருக்கும் அறிக்கையில் தெரிவித்து உள்ளது. எனினும், எந்த நிறுவனம் இந்த பணிகளை மேற்கொள்கிறது என்பது குறித்து எந்த தகவலும் வழங்கப்படவில்லை.


இதுகுறித்து வெளியாகி இருக்கும் தகவல்களில் இந்தியாவில் இயங்கி வரும் தாய்வானை சேர்ந்த பாக்ஸ்கான் நிறுவனம் தமிழகத்தில் உள்ள ஆலையில், ஐபோன் 12 உற்பத்தியை மேற்கொள்வதாக கூறப்படுகிறது. எனினும், இதனை ஆப்பிள் மற்றும் பாக்ஸ்கான் நிறுவனங்கள் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

சீனாவில் மேற்கொள்ளப்படும் உற்பத்தியை பெருமளவு குறைக்கும் நடவடிக்கைகளில் ஆப்பிள் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. வாஷிங்டன் மற்றும் பீஜிங் இடையிலான வர்த்தக போட்டியே இதற்கு முக்கிய காரணம் ஆகும். முன்னதாக பாக்ஸ்கான் நிறுவனம் ஐபேட் மற்றும் மேக்புக் உற்பத்தியை சீனாவில் இருந்து வியட்நாமிற்கு மாற்றுவதாக தகவல் வெளியானது.



## வருகிறது தனியார் விண்வெளி நிலையம்!

இன்னும் ஐந்தே ஆண்டுகளில், விண்வெளியில் அந்த விந்தை நடக்கும் என்கின்றனர். அதாவது, அமெரிக்காவை சேர்ந்த ஆர்பிட்டல் அசெம்பிளி என்ற நிறுவனம், விண்வெளி விடுதி ஒன்றை 2026 வாக்கில் திறக்கத் திட்டமிட்டுள்ளனர். ரூ.36.5 கோடி டிக்கெட் கட்டணம் செலுத்தினால், மூன்றரை நாட்களுக்கு விண்வெளியில் சுழலும் விடுதியில் தங்கலாம்.



'வாயேஜர்' என பெயரிடப்பட்டுள்ள இந்த விடுதி, 700 அடி சுற்றளவுள்ளது. நிலாவில் இருக்கும் ஈர்ப்புவிசையின் அளவுக்கு, இந்த விடுதிக்குள் ஏற்படுத்த, அதை விரைவாக சுழலும்படி செய்யவிருக்கின்றனர். இந்த விண்வெளி நிலையத்தில் 100 பேர் இருப்பர். இது போக, 300 விண்வெளி சுற்றுலா பயணிகளையும் வரவேற்கும் திறன் வாயேஜர் நிலையத்திற்கு இருக்கும்.

பணம்படைத்தவர்கள், சாகசஉணர்வுஉள்ளவர்கள்மட்டுமல்லாமல், விஞ்ஞானிகளையும் இந்நிலையம் விருந்தினர்களாக அழைக்கவிருக்கிறது. இந்த நிலையத்திற்கு தேவையான மின்சாரம் பூமியிலிருந்து கம்பியில்லா தொழில்நுட்பம் மூலம் அனுப்பப்படும். இங்கு இருப்போருக்குத் தேவையான உணவு, உடை போன்றவையும் பூமியிலிருந்து விண்கலன்கள் மூலம் எடுத்து வரப்படும்.

## ஐரோப்பாவின் மிகப்பெரிய தரவு சேமிப்பக நிறுவனத்தில் தீ : அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய அலுவலர்கள்

பிரான்ஸ் நகரமான Strasbourgஇல் அமைந்துள்ள OVHcloud என்னும் தரவு சேமிப்பகம் (cloud provider) ஐரோப்பாவிலேயே பெரியதாகும். ஆசியா பசிபிக் மற்றும் அமெரிக்க பிராந்தியத்திலும் அதன் சேவை பயன்படுத்தப்படுகிறது.

புதன் நள்ளிரவுக்குப் பின், அன்று (புதன் கிழமை) அதிகாலை திடீரென அந்த அலுவலகத்தில் தீப்பற்றியது.

அந்த தீயை கட்டுப்படுத்த 100 தீயணைப்பு வீரர்கள் ஆறு மணி நேரம் போராடவேண்டியிருந்தது. ஐந்து தளங்கள் கொண்ட 500 சதுர அடி SBG2 தரவு மையம் முற்றிலும் நாசமாகிவிட்டது.

SBG1 மோசமாக பாதிக்கப்பட்டுள்ல நிலையில், SBG3 மற்றும் SBG4 தரவு மையங்களை தீயணைப்பு வீரர்கள் காப்பாற்றிவிட்டார்கள்.

தீ விபத்தைத் தொடர்ந்து, இன்று தரவு மையங்கள் எதுவும் செயல்படாது என்று OVHcloud நிறுவனரான Octave Klaba தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின்போது, மூன்று பேர் அலுவலகத்தில் பணியிலிருந்துள்ளார்கள். என்றாலும், அதிர்ஷ்டவசமாக, இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.







## உடலை புதுப்பிக்கும் கடல் அட்டைகள்

உயிரியல் உலகில், துண்டித்த உடல் பகுதியை மீண்டும் வளர்த்தெடுக்கும் உயிரினங்கள் சில உண்டு. ஆனால், அண்மையில் ஒரு வகை கடல் அட்டை, செய்யும் காரியம் உண்மையில் அற்புதம் தான் என உயிரியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஜப்பானிலுள்ள நாரா மகளிர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், சாகோக்ளோசான் என்ற கடல் அட்டையை ஆராய்ந்து வந்தனர். ஒரு நாள், தங்கள் ஆய்வகத்திலிருந்த கண்ணாடி மீன் தொட்டியில், ஒரு கடலட்டையின் தலை மட்டும் தனியே நீந்தியபடி இருந்தது. அதன் உடல் தனியே மிதந்து சில மணி நேரத்தில் இறந்துவிட்டது.

ஆனால், தலை மட்டும் மெல்ல மெல்ல உடலை வளர்த்துக்கொண்டே இருந்தது. சில நாட்களில் அந்த அட்டைக்கு, இதயம் உள்பட அனைத்து உள் அங்கங்களும் கொண்ட புதிய உடல் முளைத்துவிட்டது.

அட்டைகள் உலகில் இப்படி ஒரு நிகழ்வு பதிவாவது இதுவே முதல் முறை என நாரா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



**தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது, மனித மூளையை குழப்புவதற்கு அல்ல மனித உடலுக்கு பணிவிடை செய்வதற்கே படைக்கப்பட்டது.**

**வில்லியம் எஸ்.பரோஸ்,**
**அமெரிக்க எழுத்தாளர் மற்றும் ஓவியர்**



# விளையாட்டு செய்திகள்

## வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடர்: இங்கிலாந்தை வீழ்த்தியது தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி

வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், 11ஆவது லீக் போட்டியில் தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றுள்ளது. ராய்பூர் மைதானத்தில் அன்று (வியாழக்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணியும் இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணி, 18.1 ஓவர்கள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மெடி 25 ஓட்டங்களையும் பீட்டர்சன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், சபாலாலா 3 விக்கெட்டுகளையும் நிட்னி மற்றும் டி பிரையன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் க்ருகர், டெலிமாக்கஸ், பீட்டர்சன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 122 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி, 13 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மோர்னி வென் வைக் 46 ஓட்டங்களையும் அல்விரோ பீட்டர்சன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இங்கிலாந்து ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், ஜேம்ஸ் ட்ரெட்வெல் மற்றும் உஸ்மான் அப்ஸல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 3 விக்கெட்டுகளை வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் சபாலாலா தெரிவுசெய்யப்பட்டார்.




## ஐசிசி இன் சிறந்த வீரராக அஷ்வின்

ஐசிசி-யின் பெப்ரவரி மாதத்திற்கான சிறந்த வீரருக்கான விருதை அஷ்வின் தட்டிச் சென்றுள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் அஷ்வின் சிறப்பாக விளையாடினார்.

பெப்ரவரியில் நடைபெற்ற 3 போட்டியில் 24 விக்கெட் வீழ்த்தியதுடன், 176 ஓட்டங்களையும் அடித்தார். அதில் சென்னையில் விளையாடிய முக்கியமான போட்டியில் சதம் விளாசினார்.

இதன்காரணமாக பெப்ரவரி மாதத்திற்கான ஐசிசி-யின் சிறந்த வீரர் விருதை அஷ்வின் தட்டிச் சென்றுள்ளார். ஜனவரி மாதத்திற்கான விருதை ரிஷப் பண்ட் கைப்பற்றினார். ஐசிசி அறிமுகப்படுத்திய நிலையில் முதல் இரண்டு மாதங்களும் இந்திய வீரர்களே விருதுகளை கைப்பற்றியுள்ளனர்.



## ஒலிம்பிக் போட்டியில் வெளிநாட்டு ரசிகர்களுக்கு அனுமதி மறுப்பு!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஜப்பான் ஒலிம்பிக் போட்டியில் வெளிநாட்டு ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜப்பானில் நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு ஜூலை மாதம் டோக்கியோவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒலிம்பிக் போட்டியில் ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படுவது குறித்து ரசிகர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது.

இதில் 47 சதவீதம் பேர் குறைந்த எண்ணிக்கையில் ரசிகர்களை அனுமதிக்கலாம் எனவும். 44 சதவீதம் பேர் ரசிகர்களை அனுமதிக்க வேண்டாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வெளிநாட்டு ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதாக ஜப்பான் அரசு மற்றும் ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.



## ரோஜர் பெடரரின் சாதனையை தகர்த்தெறிந்த ஜாகோவிச்!


உலக டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் தரவரிசையில் முதலிடத்தில் அதிக வாரங்கள் இருந்த ரோஜர் பெடரரின் சாதனையை நோவக் ஜோகோவிச் முறியடித்துள்ளார்.

உலக டென்னிஸ் வீரர்களின் தரவரிசை பட்டியலை சர்வதேச டென்னிஸ் சங்கம் அன்று (திங்கட்கிழமை) வெளியிட்டது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 33 வயதான செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச், 12,030 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி ஸ்பெயினில் ரபேல் நடாலை பின்னுக்கு தள்ளி முதலிடத்திற்கு முன்னேறிய ஜோகோவிச் அது முதல் தொடர்ந்து அந்த இடத்தை தக்க வைத்துள்ளார்.

18 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று இருக்கும் ஜோகோவிச் 2011ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி முதல்முறையாக தரவரிசையில் முதல் இடத்துக்கு முன்னேறினார். தற்போது அவர் 5ஆவது முறையாக முதலிடத்தில் இருக்கிறார். 5 வெவ்வேறு காலகட்டங்களில் அவர் மொத்தம் 311 வாரங்கள் முதலிடத்தில் இருந்து புதிய சாதனை படைத்துள்ளார்.



48 ஆண்டு கால உலக தரவரிசை வரலாற்றில் இதற்கு முன்பு 39 வயதான சுவிஸ்லாந்து வீரர் ரோஜர் பெடரர். மொத்தம் 310 வாரங்கள் முதலிடத்தில் இருந்ததே சாதனையாக இருந்தது. அந்த சாதனையை ஜோகோவிச் தகர்த்தார்.

ஆண்டின் இறுதியில் அதிக முறை முதல் இடத்தை ஆக்கிரமித்த வீரர்கள் பட்டியலில் செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்க முன்னாள் வீரர் பீட் சாம்பிராஸ் (இருவரும் தலா 6 முறை) ஆகியோர் இணைந்து முதலிடத்தில் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## ஹமாஸ் போராளிகள் அமைப்பின் தலைவராக யாஹ்யா அல்–சின்வார் மீண்டும் தேர்வு!

ஹமாஸ் போராளிகள் அமைப்பின் தலைவராக யாஹ்யா சின்வார் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

காசா முனை பகுதியில் அடுத்த 4 ஆண்டுகளுக்கு தமது அரசியல் பிரிவின் தலைவராக யாஹ்யா அல்-சின்வாரை தேர்ந்தெடுத்துள்ளதாக ஹமாஸ் போராளிகள் அமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

பாலஸ்தீனிய போராளிகளுக்கு எதிராக சந்தேகத்திற்கிடமான நபர்களைக் கொன்றது உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் 2011ஆம் ஆண்டு இஸ்ரேலுடனான கைதி இடமாற்றத்தில் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில், ஹமாஸ் தலைவரான யாஹ்யா சின்வார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையே நீண்ட காலமாகவே மோதல்கள் நிலவி வருகிறது. பாலஸ்தீனத்தின் தன்னாட்சி பெற்ற பகுதியாக காசாமுனை பகுதி உள்ளது. இந்த காசா முனை பகுதியை ஹமாஸ் என்ற போராளிகள் அமைப்பு ஆட்சி செய்து வருகிறது. இந்த ஹமாஸ் போராளிகள் அமைப்பை இஸ்ரேயல் பயங்கரவாத இயக்கமாக கருதுகிறது.



## உலகளவில் ஒரு தலைமுறையே பாதிக்கப்படும் அபாயம்– யுனிசெஃப் எச்சரிக்கை!

குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் வளர்ச்சியை அளவிடும் குறிகாட்டிகள் அனைத்தும் கடந்த ஒரு வருட கொரோனா தொற்றுநோய்க்குப் பின்னர் பின்னடைவைச் சந்தித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் யுனிசெஃப் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டமை, வறுமை, கட்டாயத் திருமணங்கள் மற்றும் மன அழுத்தம் ஆகியவை சிறார்களின் வளர்ச்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும், ஒரு தலைமுறையே இதனால் பாதிக்கப்படும் என்றும் யுனிசெஃப் குறிப்பிட்டுள்ளது.



அந்த வகையில், பசி, தனிமை, துஷ்பிரயோகம், பதற்றம், வறுமையில் வாடும் மற்றும் திருமணத்திற்குத் தள்ளப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என யுனிசெஃப்பின் நிர்வாக இயக்குநர் ஹென்றிட்டா ஃபோர் தெரிவித்துள்ளார்.

மேலும், சிறுவர்களுக்கான கல்வி, சமூக மயமாக்கல், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அத்தியாவசியச் சேவைகளுக்கான அணுகல் குறைந்துள்ளது. வரவிருக்கும் ஆண்டுகளில் தொற்றுநோயின் வடுக்களை குழந்தைகள் தாங்குவதற்கான தன்மைகள் தெளிவாக இல்லை எனவும் ஃபோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

எனவே, இத்தகைய பேரழிவு தரும் விளைவுகளை எதிர்கொண்டு, குழந்தைகளை மீட்கும் முயற்சிகளை கட்டாயமாக மேற்கொள்ளுமாறு அவர் உலக நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளார். கொரோனா தொற்றுநோய் வயதானவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், வயது அடிப்படையிலான தரவுகளை வழங்கிய 107 நாடுகளில் பதிவான 71 மில்லியன் கொரோனா வைரஸ் வழக்குகளில் 13 வயது முதல் இளம் பருவத்தினர் உள்ளடங்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், வளர்ந்து வரும் நாடுகளில் இந்தக் கணிப்புகள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களில் 15 வீதம் அதிகரிப்பதைக் காட்டுவதுடன் முக்கியமாக ஆபிரிக்கா மற்றும் தெற்காசியாவில் பாதிப்பு கணிசமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, உலகெங்கிலும் உள்ள 168 மில்லியன் மாணவர்கள் கொரோனா தொற்று நெருக்கடிகளால் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை எனவும் அந்த மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு இணையம் மூலமான கல்விக்கான அணுகல் இல்லையென்றும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்று நோயின் மோசமான விளைவுகளால் 2030ஆம் ஆண்டளவில் 10 மில்லியன் குழந்தைகளின் திருமணத்திற்கு வழிவகுக்கும் என்றும் ஏற்கனவே, திருமண அபாயத்தில் கருதப்பட்ட 100 மில்லியன் சிறுமிகள் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் யுனிசெஃப் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஐவரி கோஸ்ட்டின் பிரதமர் ஜேர்மனியில் மரணம்: ஜனாதிபதி அலசேன் குவாட்டாரா இரங்கல்!

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட் நாட்டின் பிரதமர் ஹமேட் பக்காயோகோ மறைவுக்கு ஜனாதிபதி அலசேன் குவாட்டாரா இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் தனது இரங்கல் செய்தியில், 'ஹமேட் பக்காயோகோ மிகச்சிறந்த அரசியல்வாதி, இளைஞர்களுக்கு உதாரணமாக திகழ்ந்தார். முன்மாதிரியான விசுவாசமுள்ள மனிதர்' என புகழாரம் சூட்டியுள்ளார்.

அமடோ கோன் கூலிபாலியின் திடீர் மரணத்தை தொடர்ந்து, கடந்த ஜுலை மாதம் 8ஆம் திகதி பிரதமராக பதவியேற்ற 56வயதான ஹமேட் பக்காயோகோ, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் ஜேர்மனியில் பிரெய்பர்க் நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



இந்த நிலையில், அவர் சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் உயிரிழந்தார்.

மறைந்த ஹமேட் பக்காயோகோ பத்திரிகை நிர்வாகியாக இருந்து, அரசியலில் குதித்து, அந்த நாட்டின் பிரதமராக உயர்ந்தவர்.

பிரதமர் பதவியுடன் அந்த நாட்டின் இராணுவ அமைச்சர் பொறுப்பையும் ஹமேட் பக்காயோகோ வகித்து வந்தார்.

அவரது மறைவை அடுத்து அங்கு இடைக்கால பிரதமராக பேட்ரிக் ஆச்சி நியமிக்கப்பட்டுள்ளார். ராணுவ அமைச்சர் பதவியில் அந்த நாட்டு ஜனாதிபதியின் தம்பதியான டெனே பிரகிமா குவாட்டாரா இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொவிட் நிவாரண நிதிக்கான சட்டமூலத்தில் ஜோ பைடன் கையெழுத்திட்டார்!

கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தை சமாளிக்க அமெரிக்கர்களுக்கு உதவும் நிவாரண நிதிக்கான (1.9 டிரில்லியன் டொலர்கள்) சட்டமூலத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார். அமெரிக்க நாடாளுமன்றத்தில் கொரோனா நிவாரண சட்டமூலம், நீண்ட இழுபறிக்கு பின்னர் செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது. குடியரசுக் கட்சியினர் யாரும் ஆதரவாக வாக்களிக்காத நிலையில், பிரதிநிதிகள் சபை 220-211 பாரிய பொருளாதார உதவித் திட்டத்தை புதன்கிழமை பாரபட்சமின்றி ஒப்புதல் அளித்தது. பின்னர் ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட அனுப்பி வைக்கப்பட்டது.



இந்தநிலையில் தற்போது சட்டமூலத்தில் ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார். இந்த சட்டமூலத்தின் மூலம் 85 சதவீத அமெரிக்க குடும்பங்கள் பயன்பெறும். இந்த மாதத்துக்குள் அமெரிக்கர்களுக்கு தலா 1,400 டொலர் வழங்கும் பணி தொடங்கப்படும். இந்த ஆறாவது கொவிட்-19 நிவாரண சட்டமூலம், பைடனுக்கு ஒரு பெரிய சட்டமன்ற வெற்றியாகும்.

## ஹொங்கொங்கின் தேர்தல் முறையில் மாற்றம்– சீன நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது!

சீனாவின் ரப்பர்-ஸ்டாம்ப் நாடாளுமன்றம், வீட்டோ வேட்பாளர்களுக்கான அதிகாரங்கள் உட்பட ஹொங்கொங்கின் தேர்தல் முறை மாற்றங்களுக்கு வாக்களித்து இன்று அங்கீகாரம் அளித்துள்ளது. ஹொங்கொங்கில் ஒரு தேச பக்தி அரசாங்கத்தை நிறுவும் நோக்குடனான இந்தத் தேர்தல் முறை மாற்றத்திற்கு சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸின் இரண்டாயிரத்து 895 உறுப்பினர்கள் ஆதரவளித்ததுடன் ஒருவர் கூட எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஹொங்கொங்கை ஆளும் அதிகாரத்தை தேசபக்தியுடன் நகரத்தை நேசிக்கும் சக்திகளின் கைகளில் நிலையாக வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என நாடாளுமன்ற செய்தித் தொடர்பாளர் வாங் சென் தெரிவித்துள்ளார். ஹொங்கொங்கில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து 2019ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட பாரிய வன்முறைப் போராட்டங்களை அடுத்து, அங்கு ஜனநாயகவாதிகளின் ஆதிக்கத்தை அல்லது ஜனநாயகத் தூண்களை அகற்றுவதில் சீனா தீர்க்கமாகச் செயற்பட்டு வருகின்றது.



இதன் முதற்படியாக, ஹொங்கொங்கில் ஜனநாயக ஆர்வலர்களைக் கட்டுப்படுத்த, தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சீனா அறிமுகப்படுத்தியது. இந்தச் சட்டம் தீவிரமாக நடைமுறைக்கு வந்த நிலையில், டசின் கணக்கான ஜனநாயக ஆர்வலர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஹொங்கொங் மீதான சீனாவின் அதிகார ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக அங்கு தேர்தல் நடைமுறையை சீனா கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, ஹொங்கொங்கிற்கான சீனாவின் திட்டத்தில் தான் மகிழ்ச்சியடைவதாக ஹொங்கொங்கின் தலைமை நிர்வாகி கேரி லாம் கூறியுள்ளதுடன் தேசிய பாதுகாப்புக் குறித்து மக்களிடம் புரிதலை ஏற்படுத்தும் முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளும் எனத் தெரிவித்துள்ளார்.

# ஆடைகள் எந்தவித பிடிமானமும் இல்லாமல் நிற்கும் காட்சிகள்








அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் கடும் பனிப்பொழிவின் காரணமாக ஆடைகள் எந்தவித பிடிமானமும் இல்லாமல் நிற்கும் காட்சிகள் காண்போரை ஆச்சர்யத்தில் ஆழ்த்துகின்றன.

மின்னபோலிஸ் நகரில் கடந்த சில நாட்களாகவே மைனஸ் 30 டிகிரி செல்சியஸ்க்கும் குறைவான தட்பவெப்ப நிலை நிலவி வருகிறது. மேலும் சாலைகளில் சுமார் 2 அடி உயரத்தில் பனிக்கட்டி உறைந்து கிடக்கிறது.

உறைய வைக்கும் கடுங்குளிரால் தோட்டங்களில் கொடியே கட்டாமல் ஆடைகளை காய வைத்துள்ள நிலையில் அவை பிடிமானம் இல்லாமல் நிற்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

# மகளை இளவரசி ஆக்கிய தந்தை





அமெரிக்காவில் உள்ள வர்ஜினியா மாநிலத்தில் ஜெரமையா ஹீட்டன் என்பவர் வசித்து வருகிறார். அவரது மகளுக்கு இளவரசி கதைகள் மிகப் பிடிக்கும். ஒரு நாள் "நானும் இளவரசி ஆக முடியுமா அப்பா?" எனத் தந்தையிடம் கேட்டார்.

அதை ரொம்ப சீரியசாக யோசித்துப் பார்த்த ஜெரெமையா, இணையத்தில் தேடியதில் எகிப்துக்கும் சூடானுக்கும் இடைப்பட்ட பகுதியில் பீர் தாவில் (Bir Tawil) எனும் பெயரில் சுமார் 800 சதுர கி.மீ. நிலம், இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடாமல் அனாதையாக இருப்பது தெரிய வந்தது.

மேப் வரைகையில், எல்லைப் பகுதி ஒப்பந்தங்கள் போடுகையில் இம்மாதிரி சில இடங்கள் விட்டுப் போவது உண்டு. இந்தியா – பாகிஸ்தான் இடையே இம்மாதிரி மேப் வரைகையில் விட்டு போன சியாச்சின் பகுதிக்கு இரு நாடுகளும் பின்னாளில் போரிட்டது வரலாறு. அதே போல் ஒப்பந்தம் போடுகையில் பீர் தாவிலும் விட்டுப் போய்விட்டது. புல்பூண்டு கூட முளைக்காத மலைப் பகுதி என்பதால் அங்கே மக்கள் யாரும் வசிக்கவில்லை.

உடனே எகிப்து விசா வாங்கி, கிளம்பிப் போய் பீர் தாவிலில் இறங்கி "அது எனக்கே சொந்தம்" எனச் சொல்லி, தன் உருவப் படம் பொறித்த கொடியையும் நாட்டிவிட்டு பீர் தாவில் பகுதிக்குத் தன் மகள் எமிலியை "இளவரசி எமிலி" ஆக அறிவித்தார் ஜெரெமையா.

சட்டப்படி அதற்கு உரிமை கொண்டாட, இனி ஐநா சபையை அவர் அணுகலாம். ஆனால் அம்மாதிரி சீரியசாகச் செய்யாமல் தன் முகநூல் கணக்கில் மட்டும் பீர் தாவில் படங்களைப் போட்டு தன் மகளை இளவரசியாக்கிய மகிழ்வில் இருக்கிறார் அந்தத் தந்தை.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 14.03.2021 அன்று வெளியிடப்பட்டது.